

காரைநகரில் கடந்த புதன்கிழமை நிகழ்ந்த மோதலில் சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களும், சிறிலங்கா இராணுவத்தினர் விட்டுவிட்டோடிய இராணுவத்தினரின் சடலங்களும்.

Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள்: 08 விலை ரூபா: 5.50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 ஏப்ரல் (05 - 04 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 46

## முத்தமிழ் விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது

விடுதலைப்புலிகள் கலை, கலாசார பிரிவினர் இம் மாதம் 6ஆம் திகதியில் இருந்து 15ஆம் திகதிவரை மானிப்பாய், புங்குடுதீவு, சாவகச்சேரி, நெல்லியடிப் பிரதேசங்களில் நடாத்தப்பட இருந்த முத்தமிழ் விழா தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டு வைகாசி (மே மாதம்) முதல் வாரத்தில் நடைபெற இருக்கின்றது என்று விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

# விமானக் குண்டுவீச்சில் நானாட்டான் அழிந்தது

## முன்னேறும் இராணுவத்தின் முயற்சி தடுக்கப்பட்டது

(மன்னார்)

மன்னார் பகுதியில் சிறிலங்கா படைகள் தொடர்ச்சியாக நடாத்திவரும் தாக்குதல்களால் நானாட்டான் கிராமம் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டது. அதேவேளை நானாட்டான் கிராமம் நோக்கி முன்னேற இராணுவம் எடுத்த முயற்சி புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி நறுவிலிக்குளம், தச்சன்குளம் ஆகிய பகுதிகளை நோக்கிவந்து நானாட்டான் பகுதிநோக்கி முன்னேற முயன்றபோது விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடுமையான யுத்தம்மூண்டது. இந்த சண்டையில் இராணுவத்திற்கேற்பட்ட சேதம் எதுவும் தெரியவரவில்லை.

தொடர்ந்து இரண்டாம் திகதி மீண்டும் நானாட்டான் பகுதிகளைநோக்கி முன்னேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் எதிர்த்து கடும் தாக்குதல் மேற்கொண்டனர். இந்த தாக்குதலிலும் இராணுவம் பலத்த இழப்பை சந்தித்த போதிலும் சேதவிபரம் ஏதும் தெரியவரவில்லை.

இராணுவம் விடுதலைப்புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டதைத்தொடர்ந்து மூன்றாம் திகதி காலை ஏழு மணியளவில் ஒரு அவ்ரோ விமானம் ஐந்து குண்டுகளை வீசியது. பின்னர் இரண்டு மணியளவில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலும், வவுனியாவிலும் 6 புலிகள் வீரமரணம்

(மன்னார்)

கடந்த இரண்டாம் திகதி நானாட்டான் பகுதிநோக்கி முன்னேற முற்பட்ட இராணுவத்துடனான நேரடி மோதலில் முன்னின்று போராடிய — சிவகாந்தன் (அ. தவனேசன் சுன்னாகம் யாழ்ப்பாணம்) என்பவர் வீரமரணமடைந்தார்.

மூன்றாம் திகதி நானாட்டான் பகுதிநோக்கி முன்னேற முயன்ற இராணுவத்துடனான மோதலில் 2ஆம் லெப்டினன்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தகவல்கள் நம்பிக்கை தருவதாயில்லை

(லண்டன்)

வடக்கு, கிழக்குப் பகுதிகளின் நிலைமைகள் குறித்து கொழும்பில் இராணுவ அதிகாரிகள் வெளியிடும் தகவல்கள் நம்பிக்கைக்குரியனவாக இல்லையென நேற்றிரவு பி.பி.ஸி தெரிவித்தது. குறிப்பாக சிலாவத்துறை முகாம் மீதான தாக்குதல், வேப்பங்குளத்திலிடம்பெற்ற மோதல், காரைநகர் கடற்படைமுகாம் மீதான தாக்குதல்களில் இரா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிராம மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள சாந்தைக்குளம், பம்பைமடு, கந்தபுரம், பூவரசங்குளம் பகுதிகளில் சிறிலங்கா விமானங்கள் குண்டுவீசியதால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மேலும் இப்பகுதிகளைநோக்கி கடந்த இரண்டாம் திகதியில் இருந்து ஷெல் தாக்குதலும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் தொடர்ந்தும் விமானக் குண்டு வீச்சு

(காரைநகர்)

காரைநகர் கடற்படைத்தளத்தை சூழவுள்ள பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினரின் இரவு நேரக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நேற்றும் நான்காவது நாளாக தொடர்ந்து இடம்பெற்றது.

நேற்று முன் தினம் இரவு இடையிடையே இடம்பெற்ற இத்தாக்குதல்களில் சிறிலங்கா விமானப்படையினரின் வை-8 ரக விமானமும் அவ்ரோ விமானமும், மார்செட்டி குண்டுவீச்சு விமானங்களும் மற்றும் ஹெலிகொப்ரர்களும் தீவிரமாக ஈடுபட்டன. நள்ளிரவு பலதடவைகள் குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிகொப்ரர்களும் தாக்குதல் நடாத்தியதைத் தொடர்ந்து அதிகாலை 4.45 மணி முதல் 6 மணி வரை வை-8 ரக விமானம் ஒன்று இப்பகுதிகளில் குண்டு

(8ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலை செய்யப்படுவர்

(யாழ்ப்பாணம்)


பல வெவ்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிலர் நாளை காலை பத்துமணியளவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். இவர்களது பெயர் விபரங்கள் நாளை வெளியிடப்படும்.

## இராணுவத்தினரின் சடலங்கள் கோண்டாவிலில் இன்று கையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாம் இராணுவம் மீது தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் இன்று காலை எட்டு மணியளவில் விடுதலைப் புலிகளால் கோண்டாவில் செயலகத்தில் வைத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்படும் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த உடல்கள் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கை படைகளிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)



காரைநகரில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை கண்ணனின் புகழுடல் முத்திரைச் சந்தையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டபோது எடுத்த படம்.

## காரைநகரில் 6 ஆயுதப்படையினர் பலி 37 பேர் காயம் - வால்டர் பெர்னாண்டோ

(கொழும்பு)

காரைநகர் கடற்படைமுகாமின் மீது கடந்த மூன்று நாட்களாக தொடர்ந்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டு வருவதாகக் கொழும்பில் ஏயர் சீப் மார்ஷல் வால்டர்பெர்னாண்டோ கூறியுள்ளார். அமைச்சரவைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

மாணித்த சம்போ, ஹெயர் சோப், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் போலியின் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; கண்: சந்திரன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்பு கூட்டுறவு பின்புறம், யாழ்ப்பாணம். (B. 2169)

### தேவை

அரைப் போத்தல் திரவம் கொள்ளக் கூடிய சுத்தமான போத்தல்கள் வாங்கப்படும்; இதிய தொகையாக இருந்தாலும் பரவாயில்லை. மில்க்வைற் யாழ்ப்பாணம்

(B-2317)

### வானொலி நாடகங்கள்

இன்று விற்பனையாகின்ற இரண்டே இரண்டு வானொலி நாடக நூல்கள்: அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய செட்டிக் காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- 19 நாடகங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் தமிழருவி-யாழ்ப்பாணம்.

(R-1217)


## ரொக்கற் வெடித்துச் சிதறியது

(கலிபோனியா)

அமெரிக்காவின் ரைற்றான் நான்கு திட்டத்தின்கீழ் பரிசோதனைக்காக தயாரிக்கப்பட்ட நூற்றுப்பத்து அடி உயரமான விண்வெளி ரொக்கற் வெடித்துச் சிதறி தீப்பற்றிக் கொண்டது. இந்த விபத்து கலிபோர்னியாவிமானப்படைத் தளத்தில் கடந்த திங்களன்று இடம்பெற்றது. தீ ஒரு சில நிமிடங்களில் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டதோடு எவரும் இச்சம்பவத்தில் காயமடையவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிகோவிற்கு மக்கள் அஞ்சலி

(செ. த. மை)

சாரை நகர் சிநோர் காவலரணிலிருந்து கடந்த 1 ஆம் திகதி வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான போரில் வீரமரணமடைந்த வீரவேங்கை பொலிகோ (கனகட்டி-சிறீரஞ்சன்) புகழுடம்பு நேற்று மாலை, நெல்லியடியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. துன்னாலை தெற்கு-கரவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட இம்மாவீரரின் புகழுடம்புக்கு ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் இவரது புகழுடம்பு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பொலிகண்டியிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் தகனம் செய்யப்பட்டது.

## சொல்லாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு 'கலைநுபவம்' பற்றி இளம் ஒவியர்கள் சிலருடன் சொல்லாடல் நிகழ்ச்சியொன்றை நடத்துகின்றனர். நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு இசைஇலக்கிய அமைவு விளக்கும் ஸ்பெஷல் நாடக மரபு பற்றிய செய்முறை தழுவிய சொல்லாடல் நிகழ்ச்சியொன்றும் நடைபெறும். கலை இலக்கிய ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.


## புதிய வகுப்புகள்

# S. L. E. A. S

**COMPUTER - BASIC**

ஆரம்பம்: 6-4-91 8.30 மணி

சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்

மேலும் விபரங்களுக்கு:

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(OLR தேவாலய மேற்குப்பக்கம்)
16, 3rd CROSS STREET,
JAFFNA. (B-2320)

மில்க்வைற் MWS MILKWHITE

மிக்க சக்தி கொண்ட அடிக்கட்டு உரமாகவும், பூச்சிகொல்லியாகவும் பயனளிப்பது

## "நீமியா உரம்"

இணுவில், திருநெல்வேலி, யாழ்நகர், அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகின்றது.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

(B-2310)


## "நிதர்சனம்" நிறுவனத்தால் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. செய்தியாளர் (Journalist)

(அ) பத்திரிகை நிறுவனமொன்றில் உதவி ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் அல்லது பத்திரிகை நிறுவனமொன்றில் பத்திரிகையாளராக 5 வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் அல்லது இதற்குச் சமமான தகைமை.

(ஆ) ஆங்கில அறிவு சிறப்புத் தகைமையாகக் கணிக்கப்படும்;

2. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர் (Programme Editor)

(அ) கலை, இலக்கியத் துறைகளில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஆ) கலைஞர்களிடமிருந்து பெறப்படும் ஆக்கங்களை மதிப்பீடு செய்யவும், தணிக்கை செய்யவும், செயனிடவும் போதிய ஆற்றலும், அனுபவமும் இருத்தல் வேண்டும்;

3. பிரதி எழுதுபவர் (Script Writer)

(அ) கலை, இலக்கியத் துறைகளில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த எழுத்தாற்றல் இருத்தல் வேண்டும்;

4. இசைத் தயாரிப்பாளர் (Music Organizer)

(அ) "இசைக் கலைமாணி"ப் பட்டம் அல்லது வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரம்.

(ஆ) இசைத் துறையில் 7 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உடையவருக்கு கல்வித் தகைமையில் விலக்களிக்கப்படும்.

5. தகவல் சேகரிப்பாளர் (Information Officer)

(அ) க. பொ. த. (சா. த) கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி;

(இ) பொது விவேகமும், ஆங்கில அறிவும் சிறப்புத் தகைமைகளாகக் கருதப்படும்;

6. மக்கள் தொடர்பு அலுவலர் (Public Relations Officer)

(அ) க. பொ. த. (சா. த.) கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி.

(ஆ) ஆங்கில அறிவு சிறப்புத் தகைமையாகக் கருதப்படும்.

(இ) மக்களுடன் பழகும் தன்மை கவனத்தில் எடுக்கப்படும்.

- ✶ ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்;
- ✶ விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்துடன் தங்களது தகைமைச் சான்றிதழ் பிரதிகளையும், அனுபவச் சான்றிதழ் பிரதிகளையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- ✶ விண்ணப்பங்கள் யாவும் முழுமையான விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு 1991-04-15 ஆம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்
- ★ தகுதிகளும், அனுபவத்திற்கேற்ப வேதனம் வழங்கப்படும்.

பொறுப்பாளர்,
"நிதர்சனம்"
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

1991-04-03 (B-2319)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| வீரஜனனம் | வீரமரணம் |
| --- | --- |
| 14-06-1973 | 06-03-1991 |

## வீரவேங்கை "ஜீவா"

### ஜெயகுமார் - நிர்மலன்

(காஞ்சியப்பாவின் பேரன்)

வந்த பெரும் பகை தன்னை -
வாள் எடுத்தே விரட்டி,
வஞ்சமரில் தலை சாய்ந்த -
வேங்கை உனை நினைக்கின்றோம்;
சொந்தம் இந்த மண் எனவும்,
சுய உரிமை அதை பெற எனவும்,
சொல் அமுதம் வழங்கிய -
சுந்தர ரூபனை துதிக்கின்றோம்.
செந்தமிழும் உயரும்,
செங்கொடியும் பறக்கும்;
சிந்தையுள் நிறைந்த, எங்கள் -
ஜீவாவின் பெயரும் நிலைக்கும்
பந்தமொடு பாசங்கள் -
போற்றி தினம் வணங்கும்
பாரினில் உன் புகழ் -
என்றும் மேலோங்கி வளரும்.

இன்று 05-04-91 வெள்ளிக்கிழமை அந்தியேட்டி கிரியைகள் மயிலியதனை இல்லத்தில் நடைபெறும்.

மயிலியதனை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை.

பெற்றோர், குடும்பத்தவர், உறவினர்கள், நண்பர்கள்-

(R-1307)



## நினைவு தருகின்றோம்

## 1991 - 04 - 05

1986 ஆம் ஆண்டு படுவான்கரை கரவெட்டியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீதான தாக்குதலின் போது வீரமரணமடைந்த

லெப். புவிராஜ் (சா. உதயராசன் : கல்லடி மட்டு நகர்)

1987ஆம் ஆண்டு வசாவிளானில் சிறிலங்கா படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

றொபின் (சுந்தரையா நாகரத்தினம் - பண்டத்தரிப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

எதிர் கால நம்பிக்கையோடு
ஏங்கிக் கிடக்கும்
நாளைய சந்ததியினருக்காக
கடுமையான முனைகளில்
உங்கள் வீரம்
எத்தனை தடவை
புயலாக எழுந்திருக்கும்!
உதிரத்தை காவிய உரமாக்கி
விழித்தெழும் உணர்வுகளோடு
புனிதர்களாக மரணித்தீர்கள்!
நாளை மலரும்
புது விடியல்
உங்கள் நினைவுகளோடு பிரசவிக்கும்.

கவிதை: டானியல் சவுந்திரன்

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2190)

# ஈழநாதம்
## வெள்ளி மஞ்சரி

ஆக்கிரமிப்பைத் தொடங்கும் நாடு ஒவ்வொன்றும் மனிதநேயத்தின் பொருட்டும், உலக சமாதானத்துக்காகவுமே தான் அவ்வாறு நடந்து கொள்வதாகக் கூறுவது வழக்கம்.

— ஜவஹர்லால் நேரு





பொங்கு கடல் தாண்டி இவை சென்று
போரில் எதிர் வந்தவரை வென்று
அங்கு அவை வென்றவைகள்
அஞ்சி ஓடிச் சென்றவைகள்
இங்கு சொல்லியே சிரிக்கும் நின்று

வன்பகைவர் நேரில் வரின் சரிக்கும்
வந்தபகை மூச்சினிலே எரிக்கும்
அன்பரென வந்தவரை
ஆதரித்து நின்றவரை
இன்ப முகம் காட்டிநின்று சிரிக்கும்

தாய்மொழிக்கு இன்னலெனில் தீகைக்கும்
தாய்தேசத்த போதும் இவை பகைக்கும்
சாய்வதற்கு நஞ்சருந்தி
மண்டியிடா நெஞ்சுகரை
சாய்வதற்கு முன்பும் வேங்கை நகைக்கும்!

— நாவண்ணன்




இந்தியாவில் கைது செய்யப்பட்டு தமிழீழத்தின் வடகரையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைப் பார்த்த இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் ''இந்த நிலையிலும் உங்களால் எப்படி சந்தோஷமாக இருக்க முடிகிறது?'' என்று கேட்டார். அதற்கு ஒருபோராளி ''அது தான் விடுதலைப் புலிகளின் தனித்துவம். நாங்கள் சாகும் போதும் சிரித்துக்கொண்டே தான் சாவோம்'' என்றான். திருமலை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோன்சனின் இயல்பும் அது தான். எந்தமாதிரியான சூழ்நிலை இருந்தாலும் இவனது அந்தக் கலகலப்பான சுபாவம் மட்டும் மாறுவதில்லை. இன்று இவனை நேசித்த முல்லைத்தீவு மக்களிடம் இவனது பெயரைக் குறிப்பிட்டால் அவர்களது கலகலப்பு ஓய்ந்துவிடும்: கண்கள் குளமாகிவிடும். அந்தளவுக்கு இவன் முல்லைத்தீவு வாழ் மக்களுடன் இரண்டறக் கலந்தவன்.

தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் நெருக்கடிகள் மிகுந்த காலகட்டம் இந்திய இராணுவம் எமது மண்ணில் கால்பதித்திருந்த காலமாகும். அக்காலகட்டத்தில் முல்லைத்தீவின் மக்களினதும், காடுகளினதும் சிறகுகளால்தான் பெரும்பாலான போராளிகள் காப்பாற்றப்பட்டனர். முல்லைத்தீவு மக்களை போராட்டத்தோடு இணைத்ததில் கணிசமான பங்கு ஜோன்சனுக்கும் உண்டு. இராசா இராசேஸ்வரன் என்ற இயற் பெயரைக் கொண்ட இவன் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் காலடிவைத்ததும் தனது சுறுசுறுப்பான செயல்களாலும் கலகலப்பான சுபாவத்தாலும் எல்லாப் போராளிகளையும் கவர்ந்தான்.

ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்பாளர்களின் கொடுமைகளினால் தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்து வந்த திருமலை மக்களின் நலன்களைக் கவனிக்கும் பொறுப்பு இவனிடம் கொடுக்கப்பட்டது. அந்தக் கடமைகளை சிறப்பாகவே செய்தான் ஜோன்சன்.

குடிசைகள் போடுவதற்கு இடங்கு வேண்டுமா, காட்டுக்குச் சென்று தடி வெட்ட வேண்டுமா, அந்தக் குழந்தைகளின் படிப்பிற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டுமா, அவர்களுக்கான வைத்திய வசதிகள் செய்யவேண்டுமா இப்படியாக அவர்களுக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளும் இவனே கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட வேலை இவன் நினைப்பது போல நடந்தால் தான் இவனுக்கும் திருப்தி. அதற்காக எந்தச் சிரமத்தையும் தாங்கிக்கொள்ளத் தயாராக இருந்தான் இவன். இயக்கத்தின் மருத்துவப் பிரிவில் இவன் பயிற்சி பெற்றிருந்தமையால் சமயத்தில் குட்டி மருத்துவனாகவும் கடமையாற்ற வேண்டியிருந்தது

மக்களோடு இவன் பழகும் தன்மையைக்கண்ட முல்லைத்தீவு மாவட்டப்பொறுப்பாளர் இவனை ஒரு பிரதேசப் பொறுப்பாளனாக நியமித்தார். செம்மலைப் பகுதியில் இவன் பிரதேசப் பொறுப்பாளனானான். மக்களை அரசியல் மயப்படுத்துவதிலும், அவர்களில் ஒருவனாக வாழ்ந்து அவர்களை வென்றெடுப்பதிலும் இவன் தனி முத்திரை பதித்தான். இந்திய இராணுவத்தின் வருகையின் பின் ஐந்து கோரிக்கைகளை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் திலீபன் உண்ணாவிரதம் இருந்தபோது முல்லைத்தீவில் திருச்செல்வம் உண்ணாவிரதம் இருந்தான். இந்த உண்ணாவிரத நிகழ்வின் ஏற்பாடுகளை இவனே முன்னின்று கவனித்தான். அக்காலகட்டம் இவனது நிர்வகிக்கும் திறனை வெளிக்காட்டியது.

இந்திய வல்லரசு எம்மக்கள் மீது வலிந்து ஒரு போரைத் திணித்தபோது அச்சவாலை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டான் இவன் அது இவனது வாழ்வில் மறக்கமுடியாத காலகட்டம். ஏனெனில் இவன் ஒரு மங்கையிடம் தன் மனதைப் பறிகொடுத்திருந்தான். இருவரும் தமது எதிர்காலவாழ்வுபற்றி ஆயிரம்மனக் கோட்டைகள் கட்டியிருந்தனர். ஆனால் அவர்களது கற்பனைகள் போராட்டத்தை விட்டு வெளியே இழுக்கவில்லை. போராட்டத்தை நேசிக்கும் தன்மை தான் இவர்களது அன்புக்கும் பாலமாயிற்று! இவனை இராசா இராசேஸ்வரனாகப் பார்க்காமல் ஜோன்சனாகவே நேசித்தமையால் போராட்டக் களத்திற்கு செல்ல விடை கொடுத்தாள் அவள். இருவருக்கும் தெரியும் எந்தநேரமும் இவன் உயிரை ஏதாவதொரு ரவை பறிக்கலாமென்று. ஆனாலும் போராட்டம் பற்றிய நம்பிக்கைகளை வளர்த்துக்கொண்டனர் இவர்கள் இருவரும்.

இந்தியப் போரின்போது இருவரும் சந்திக்கும் வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருந்தன. கோப்பாய் வெளிகளிலும் வன்னிக் காடுகளிலும் இந்திய இராணுவத்தினருடன் துப்பாக்கி மொழியில் பேசிக்கொண்டான் இவன்; இந்தியப்படைகளிடம் இலட்சம் என்ற இலக்கம் இருந்தது - புலிகளின் நெஞ்சிலோ இலட்சியம் என்ற பதக்கம் இருந்தது: அது மக்கள் பலத்தைப் பெற்றுக் கொடுக்கவே இந்திய இராணுவம் இங்கு நிலைக்க முடியாமல் எம் மண்ணை விட்டு வெளியேறியது.

சில நாள் ஓய்வுக்குப் பின் மீண்டும் போர் தொடங்கியது; இந்திய இராணுவத்தினருடனான போரில் பயிற்சி முகாமில் இவன் ஆற்றிய பங்கு, களத்தில் இவன்காட்டிய தீரம் என்பன இவனை இப்போரில் ஓர் அணித்தலைவனாகமாற்றியிருந்தது. வன்னிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களின் தொகை குறைக்கப்பட்டமைக்கு இவனது துப்பாக்கியும் கணிசமான பங்காற்றியிருக்கிறது; கொக்காவில், மாங்குளம் என்பன இவ்வாறு இவனது பங்களிப்புக்கு சாட்சிகூறும் விடுதலைப் பிரதேசங்கள். மாங்குளம் முகாம் தகர்ப்பில் போர்க் கரும்புலியாகி வீரமரணமடைந்ததைத் தொடர்ந்து போரிக்கின் வன்னி நடமாடும் அதிரடிக் குழுவிற்கு இவன் தலைமை தாங்கினான்;



மேஜர் ஜோன்சன்

14.02.91 அன்று வன்னி நடமாடும் குழு தனது அடுத்த தலைவனை இழந்தது. முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியை நோக்கி வெளியேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினரை திருப்பியனுப்பும் பணியில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான் ஜோன்சன். சண்டையில்கூட அவன் தனது வழமையான பாணியைக் கைவிடவில்லை. நீண்ட நேரச் சண்டையின்பின் அந்த ரவை இவனைச் சந்தித்தது. நாடிக்கு அண்மையில் துளை போட்ட அந்த ரவை இவனை எம்மிடமிருந்து பிரித்தது. எப்போதும் சிரித்தபடி காட்சியளிக்கும் இவனை இழந்த மண் அழுதது.

இவனைப் பற்றி இவனது ஆப்த நண்பன் ஒருவனிடம் விசாரித்தபோது ''மம ஜோன்சன்'' என்று தான் இவனைக் கூப்பிடுவோம் என்றான், ''எந்தச் சம்பவத்தின் பின்?'' என்று கேட்டபோது ''ஒரு நாள் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் மோதல் நடைபெற்றபோது இவன் காட்டிற்குள் வழிதவறி விட்டான். சண்டை முடிந்தபின் இவனைத் தேடினோம். இரவு நீண்டுகொண்டே போனது. காட்டுக்குள் மனித நடமாட்டத்தைக் கண்ட இவன் தனது துப்பாக்கியின் ரவை அறைக்குள் ரவையொன்றை ஏற்றினான். ''யாரது?'' என்றோம். ''மம ஜோன்சன்'' என்றான்; ஸ்ரீலங்கா இராணுவமாயின் தனது மொழியைக் கேட்டுச் சுடாது. நாங்களாக இருந்தால் தனது பெயரைக் கேட்டுச் சுடமாட்டோம். முதலில் நிலைமையைச் சமாளிப்போம். ஸ்ரீலங்கா இராணுவமாயின் தப்பி ஓடுவோம். நாங்கள்தான் என்றால் வெளியே வருவோம்'' என்றெண்ணி சமயோசிதமாக நடந்து கொண்டான் இவன். ''அன்றிலிருந்து இவனை மம ஜோன்சன் என்றுதான் கூப்பிடுவோம்'' என்று கூறி அவனது நினைவுகளில் ஆழ்ந்தான் அப்போராளி.

இவனது மரணச்சடங்குகூட இவனது வீட்டில் நடைபெறவில்லை; ஏனெனில் அந்த மண் மீட்டெடுக்கப்படவில்லை. இவனது அன்புக்குப் பிரியமானவளின் இல்லத்திலே தான் இவனது புகழுடல் வைக்கப்பட்டிருந்தது விழிநீரால் இவனது உடலை நனைத்த இவனது காதலிக்கு இந்த முடிவு என்றோ ஒரு நாள் ஏற்படும் என்று நன்றாகவே தெரியும், அவனோடு பழகிய நாட்களை நெஞ்சில் சுமந்து மீண்டும் இலட்சியத்திற்கான பங்களிப்பில் அவள் ..

## புற்றுநோயை கட்டுப்படுத்த உயிர் அணு கண்டுபிடிப்பு

★ பெருங்குடல் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தும் உயிர் அணு ஒன்றினை வாஷிங்டனில் ஆய்வாளர் கண்டு பிடித்துள்ளனர். எல். எல். ரி என்று அழைக்கப்படும் இந்த உயிர் அணு மூலம் பெருங்குடல் புற்று நோய்க்குக் காரணமாயிருக்கும் கலன்களைச் சிதைக்க முடியும். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் உயிர் அணு நோயைக் கட்டுப்படுத்தும் வகையைச் சேர்ந்தது.

# கேள்விகள்

சிறுகதை

'இது என்ன மரம் அப்பா?
''வேப்பு''
''என்ன வேம்பு''
'' ......',

சைக்கிளில் மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டிருந்தான்; வீதி ஓரத்தில் நின்ற மரத்தைக் காட்டிய மகன் பரதனின் கேள்வி இவனை சிரமத்திற்குள்ளாக்கியது.

மலை வேம்பு, சிறுவேம்பு என இரண்டுவகை வேம்பு மரங்கள் இருக்கிறது என்று மரவேலைசெய்யும் தியாகண்ணை சொல்லக் கேட்டிருக்கின்றான். ஆனால் அதை இப்போது கூறி மகனுக்கு புரிய வைக்க முடியாது அவ்வாறு வேம்பின் வகையை அறிய வேண்டும் என்று மகன் கேட்கவுமில்லை. அப்படி அறிவுணர்வுடன் கேட்கும் பருவ முதிர்வும் அவனுக்கு இப்போதில்லை

மகனுக்கு நான்கு வயது ஆகியிருந்தது வலு சுட்டித்தனம். வயதையும் மீறிய அறிவு அவனுக்கு. துருவித் துருவி கேள்விகள் கேட்பான்.

''அப்பா ஏன் சேட்டுப்போடுறீங்கள்? - அப்பா எங்காவது புறப்படப்போகிறார் என்பதை அறிய இப்படிக் கேட்பான். மகனின் புத்தி வீரியத்தைப் பற்றி இவனுக்கும் மனைவிக்கும் உள்ளில பெரு மகிழ்வு

'இது ஆரின்ர சைக்கிள்'
'அப்பா வின்ர'
'அப்பா எங்க வாங்கினீங்கள்'

''......'' இப்படி எதையாவது கேட்டுக் கொண்டிருப்பான் சில வேளைகளில் இவனுக்கு மகனின் கேள்விகளால் சிரிப்பும் வரும் - கோபமும் வரும். பிள்ளைக்குத்தெரியுமா இவனின் நிலைபற்றி எனினும் குழந்தையின் மனதுக்கும், புதுகிஜீவிப்புக்குமாக இவனும் மகனுடன் அவனின் கேள்விகளுக்கு பதில் சொல்லுவதாயிற்று.

''கால் விறைத்திட்டுது மர நிழலாகப் பார்த்து நிற்பாட்டுங்கோ'' மனைவி சைக்கிளின் பின்கரியலில் இருந்தபடி சொன்னாள்.

சைக்கிளை ஓட்டிவருபவனைவிட அதில் இருப்பவளுக்கு களைப்பு அதிகமாக இருக்கிறது. இதுகூட ஒரு மாறுபட்ட விதிதான்.

'கொஞ்சம் பொறுமப்பா, கடை நிற்கிற இடமாகப் பார்த்து நிற்பாட்டுவம்'என்று மனைவிக்குச் சொன்னான்.

'வேண்டாம் ஹெலி, பொம்மர் வந்தாலும் சனங்கள் கூடி நிற்கின்றதைக் கண்டால் அடிப்பாங்கள் நீங்கள் இங்க நிழலாகப்பார்த்து நிறுத்துங்கோ. 'பிளாஸ்க்கில் கோப்பி இருக்கு பிள்ளைகளுக்கு ஊத்திக் கொடுப்பம்.'

தூரப்பயணம் சைக்கிளில் பயணம் செல்கிறபடியினால் மனைவி பிள்ளைகளுக்காக சுடு நீர்ப்போத்தலில் கோப்பியை ஊற்றிக் கொண்டு வந்திருந்தாள். இப்பவெல்லாம் கடைகளில ஏதாவது சாப்பிடுவதாக இருந்தால் செலவு அதிகம எல்லாவற்றிற்குமாக முன்பே தயார்ப்படுத்தி வைத்திருந்தாள். இவைகளைவிட சந்திகளில் விமானங்களின் திடீர்த்தாக்குதலில் வீணாக அவதிப்பட வேண்டி வரும் என்பதே முக்கிய காரணமாக இருந்தது.

மனைவிக்கு விமானங்கள் எப்படி பயமுறுத்திவைத்துள்ளன என்று புரிந்தது இப்படித்தானே எங்களின் மக்கள் எவ்வளவு கொடுமைகளுக்குள்ளையும், அவலங்களுக்குள்ளேயும் பயந்து பயந்து வாழுதுகள் என்ற நினைவும கூட வந்தது.

'அப்பா கடைக்குப் போவம் எனக்கு 'பிஸ்க்கற்' வாங்கித் தாங்கோ' என சைக்கிளில் முன்னுக்கிருந்த மகன் பரதன் கேட்டான்.

'ம். இவர் அப்பாவுக்கு சைற் பண்ணிறார். கடைக்கு இப்ப வேண்டாம் பேசாமல் இரும்' மனைவி பரதனைக் கட்டுப்படுத்தினாள்.

அவனுக்கு எதைப்பற்றிப் பயம்? விமானங்கள் குண்டு போடுவதையும், அவை மேலிருந்து சுடுவதையும் அவற்றால் விளையும் அனர்த்தங்களையும் அறியும் பருவம் அல்ல அது.

பரதன் கேட்டான்?

'பொம்மர் வந்து ஏனம்மா அடிப்பாங்கள்?

பிஞ்சுக்குழந்தையின் கேள்வி பெற்றவளை மனம் இளக வைத்தது. கேள்வியின் பொருளுக்கு அவள் பதில் சொல்லவில்லை.



'அவங்கள் சும்மாக அடிப்பாங்கள்'

'ஏனம்மா சும்மாக அடிப்பாங்கள்'

'அவர்களுக்கு தமிழர் என்றால் பிடிககாது'

'ஏனம்மா பிடிக்காது'

'அவங்களுக்கு பிடிக்காது, நீ பேசாமல் இருதம்பி' அதுதான் அவளுக்கும் புரியவில்லை. தமிழர் என்றால் ஏன் பிடிக்காது? ஆனால் மகன் தொடர்ந்து எதையாவது கேட்டுக்கொண்டிருப்பான் என்பதை நிறுத்துவதற்காக மொட்டையாகக் கூறி நிறுத்தினாள்.

சைக்கிளை வீதி ஓரத்தில் மரநிழலில் நிறுத்தி, இவர்களை இறக்கினான். மனைவி

- எஸ். கருணாகரன்

யின் மடியில் இருந்த குழந்தை இவர்களின் இரண்டாவது பிள்ளை, நிமிர்ந்து கைகால்களை நிமிர்த்தி சோம்பல் முறித்தது குடைபோல விரிந்திருந்த மரம் குளிர்மையான நிழலைப் பரப்பியது. இவ்வளவு நேரமும் பட்டுவந்த களைப்பும், அவதியும் இறங்கியது போன்ற குளுகுளுப்பு.

இளையவனை மனைவியிடமிருந்து வாங்கி முத்தமிட்டான். மனைவி, பையினுள் இருந்த சுடுநீர்ப்போத்தலிலிருந்து கோப்பியை ஊற்றிக் குழந்தைகளுக்கு கொடுத்தாள்.

வீதியில் பயணிகள் சைக்கிள்களில் இவர்களை முந்திக் கொண்டும் விலத்தியும் போய்க்கொண்டிருந்தனர். இப்ப எதற்கும் எங்கும சைக்கிள்தானே. எங்களின்ர போக்கு வரத்துச் சாதனமாக சைக்கிள் மட்டும் தான இன்றைக்குள்ளது.

பின்னுக்கு பாரத்தைக்கட்டி முன்னுக்கும்ஏதாவது பொருள்களை ஏற்றியபடி போய்க் கொண்டிருந்தார்கள். வெகு தூரத்திலிருந்து அவர்கள் வருகிறார்கள் என்பதை அவர்களின் களைப்பில் இருந்தும், சைக்கிள்களில்இருந்தும் உணர முடிந்தது. இராணுவத்தின் முகாம்கள் பிரதான பாதைகளில் தடையாக இருப்பதால் காட்டுப்பாதைகளூடாகவும், சேற்றுநிலம், கடற்பிரந்தியம என்று இராணுவத்தின் பார்வையில் படாது சிரமப்பட்டு வருகிறார்கள். முன்னர் ஒரு நாளில் செய்யும் பயணம் இப்போது மூன்று நான்கு நாட்களுக்கு மேலும் செல்கிறது நூறு நூற்றியிருபது 'கிலோ' பாரம்வரையில ஏற்றி வருவதற்கு சைக்கிளும், மனிதர்களும் பழகிவிட்டாயிற்று எதைக் கொண்டு வருவதாக இருந்தாலும் அனேகமாக சைக்கிளிதான்.

போனவாரம கூட இரண்டாவது குழந்தைக்கு பால்மா வாங்குவதற்காக ஏறி இறங்காத கடைவாசல்கள் இல்லை. பினனர் ஒரு சைககிள் வ்யாபாரியிடமே வாங்கினான். விலை மடங்குகளால் அதிகரித்திருந்தது. ஆயினும் அது கிடைத்ததே பெரிய விடயம். அவ்வளவிற்கு பொருளகளின் விலையும தட்டுப்பாடும்,

பரதன் தாயிடமிருந்து கோப்பியை வாங்கிக்குடிக்க மறுத்தான. கடையில பிஸ்கற்' வாங்கித் தரவில்லை என்ற கோபம அவனுக்கு. ஆனால் சமாதானப்படுத்தி ஒருவாறு குடிக்கவைத்தாள்.

இவனும மனைவியும் மிகுதியைக் குடித்தார்கள்,

இன்னும் பத்து மைல்களுக்கு மேல் போகவேண்டும். அங்கு போய்ச் சேருவதற்கு பதினொருமணிக்கு மேல் ஆகும். வெயில் கூடிவந்தது. குடைபிடித்துக்கொணடு இவ்வளவு தூரம் சைக்கிளில்போக முடியாது. அதனால் முழு வெயிலையும் காய வேண்டியதுதான். இளையவனுக்கு வெயில் பிடிக்கும் என்பதால் துவாயினால் போர்த்திருந்தாள். மூத்தவனுக்கு தொப்பியைப் போட்டிருந்தார்கள்.

சற்று நேரம் இளைப்பாறி விட்டு மீண்டும் புறப்பட்டனர். அடுத்துவந்த வெளியைக் கடப்பதற்காக இவன் சைக்கிளை வேகமாக மிதித்தான் எதிர்க் காற்று எதிர்த்துப் பின்தள்ளத் தள்ள இவன் தன்வலுவைக் கூட்டி மிதித்தான்.

முன்னுக்கிருந்தபடியே பரதன் கண் அயர்ந்துவிட்டான். இவனுக்கு மிகுந்த சிரமமாக விருந்தது. பின்னுக்கு மனைவியும் குழந்தையும- அவளும் சிரமப்பட்டே இருக்கிறாள். தாய்க்கும் மகனுக்குமிடையில் நடக்கும் பேச்சுக்களை இவன் சுவாரசியமாக இரசித்தபடி சைக்கிளை ஓட்டினான் எனினும் நெஞ்சில அந்த வார்த்தைகள் வலிப்பை ஏற்படுத்தின.

'அப்பா நீங்கள் சொல்லுங்கோ ஏன் பொமமர், எங்களுக்கு அடிப்பாங்கள்' மகனின் கவனம் இவனிடம்திரும்பியது. தாயின் பதிலில் திருப்திப்படாமல் இவனிடம் கேட்க, இவனும் எதுவுமே சொல்ல முடியாத நிலையில்..., சற்று முன்னர்மனைவி பதில்சொல்ல முடியாது திணறியபோது இவன் சிரித்தான். இப்போது இவனே திணற வேண்டியதாயிற்று இவனுக்குப் பதில் தெரியும். அதை இப்போது கூறி புரியவைக்க முடியாது. காலம அவனுக்கு தெரியப்படுத்தும் என்றாலும் மகனின் கேள்விக்கு பதில் கூறவேணடுமே.

'அது... அது தம்பி நாங்கள் தமிழர் அவங்கள சிங்களவர் தமிழரை அவங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனாலதான் அடிக்கிறாங்கள்' - இவன குழந்தைக்கு புரியும் படி இயன்ற அளவிற்கு பக்குவமாகச் சொன்னான்.

''சிங்களவர் எப்படி இருப்பாங்கள்''

குழந்தை இப்படிக் கேட்டதற்கான காரணம்; குழந்தையின் மனதில் சிங்களவன் என்றால் விகாரமாக ஒருபயங்கர மிருகம்போல தோன்றியிருக்க வேண்டும். அதனால் தான அவன் இப்படிக் கேட்கின்றான அவனின் எண்ணங்களை ஒழுங்குபடுத்த வேண்டும் என நினைத்தவன்,

''சிங்களவரும் எங்களைப் போலத்தான் இருப்பாங்கள் அவர்கள பேசுகிறதுதான் சிங்களம். அதனாலதான் சிங்களவர் எனகிறது என்றான்

'அப்ப ஏன் அவங்களுக்கு எங்களோட கோபம''

குழந்தையின் கேள்வி எதிர் காலத்தில் என்ன விளைவுகளையெல்லாம் கொண்டு வரும் என்பதை உணர்த்தியது. இவன் சிறுவனாக இருந்த காலத்தில் நடந்த இனக்கல வரங்களும், அழிப்பு வேலைகளும் இன்றைக்கு நிலைமையை மாத்தியிருக்கு. இப்போது நடக்கும் பேருமமன நீதியற்ற செயல்களும் இன்னும் எங்களை விடுதலை பறுவதற்காக முனைப்புக் கொளள வைக்கும் என்பது தெரிந்தது.

பரதனின் கேளவியில் எவ்வளவு உணமையிருக்கிறது இந்தச் சின்னப் பிள்ளையின் கேள்விககே அவர்களால் எந்தப பதிலும் கூறமுடியாது. இதுகளின்ர விளைவுகள் பாடம படிப்பிக்கும்.

'அவங்களுக்கு நாங்கள் இங்க இருக்கிறது விருப்பமில்லை. தங்கள் மட்டும் தான். இங்க வாழ வேண்டுமாம். அதுதான் தம்பி

இவனும் மகனும் பேசிக் கொணடு வருவதை மனைவி காதில் வாங்கியும் வாங்காமலும இருந்தாள். அவள் எதுவும பேசவிலலை. அவளுக்கு பிரயாணககளையாக இருக்கும. அலலது உத்தரவாதமற்ற எதிர்காலததைப் பற்றிய அச்சமாக இருககலாம்.

ஒருகையினால் 'காண்டிலைப்' பிடித்துககொண்டு மறு கையினால் மகனை விழாமல் அணைத்தபடி அவதானமாக சைக்கிளை ஓட்டினான். சீரற்ற பாதைகளில் மிகவும் சிரமப்படவேண்டியிருந்தது.

மனைவிக்கு கணவன் படும் கஷ்டத்தைப் பார்க்கும்போது வேதனை மிகுந்தது. எங்காவது கொஞ்சநேரம் நின்று ஆறிவிட்டுப போகலாம் என்றாலும் பின்னர் திரும்பி வர நேரம போதாது.

தூரத்தில ஏதோ சத்தம் கேட்டது. மனைவி பரபரப்படைந்தாள்.

'சததம் எதுவோ கேட்குதப்பா. கவனமாகப் பாருங்கோ' அவளின் ஊகம் சரியாகியது.

வரவரச் சத்தம் கூடியது. ஹெலிகொப்டர் ஒன்று மேற்கிருநது கிழக்கு நோககி வந்து கொணடிருந்தது இவர்கள் ஒரு வீட்டினுள் ஒதுங்கிக் கொண்டார்கள். ஹெலியின் வரவுடன வீதி திடீரென வெறுச் சோடிவிட்டது. ஒரு சனமும் இல்லை சைக்கிள்கள் வேலி ஓரங்களில் சாத்தப்பட்டிருந்தன. ஊரடங்கு என்றால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது.

இவர்களைக் கடந்து 'ஹெலி மேலால் போனதும் மீண்டும' வீதியில் சனங்களின் நடமாட்டம் தொடர்ந்தது. சற்றுத் தூரத்தில் ஹெலியிலிருந்து சூட்டுச் சத்தம கேட்டது. ஏதாவது வாகனமொன்றை அல்லது சில பொதுமக்களைக் கண்டிருக்கலாம்

இன்னும் ஆஸ்பத்திரிக்குப் போவதற்கு இரண்டு மைல் வரை போகவேணும் மகனும் 'ஹெலி'யின் சூட்டுச் சததத்துடன் தூககமவிட்டு எழுந்து விட்டான.

சூட்டுச்சத்தம் அடங்கியதும் இவர்கள் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டனர். வழியில் போராளிகளின் வண்டியொன்று இவர்களை நோக்கி வந்து விலத்திச் சென்றது. அவ்வண்டியில இருந்த போராளிகளின் ஆயுதத்தை மகன் இவனுக்கு கூறினான்

'அங்க ஏ. கே. கொண்டு போகினம்' பரதனின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. இவனும் மகனின் மகிழ்வில் திளைத்தான.

'அப்பா இந்தக் கம்பிகள் ஏன் போட்டிருககு'

(6 ஆம் பக்கம் பார்க்)



கவிதை

## 'உடன் வரவும்!'

மரணம் வீதிகள் தோறும்
உலாவருகிறது,
சுதிச் சுவர்கள் - அஞ்சலி
சுவரொட்டிகளால்
நிறைந்தே கிடககிறது.
'உடன் வரவும்;'
தந்தி அடிதது சொல்லியுமாயிற்று
விடியலின் ஆரம்பம தெரிந்தும்
தூக்கம் இன்னும் என்ன
வேண்டிக் கிடக்கிறது!
அதோ!
பாலைவன வெளியின்
பாதியில் கிடக்கிறது
திருடப்பட்ட எம் சுதந்திரம்.
கிட்டப் போனால்
எட்டப் போவதற்கு - அது
அடிவானமல்ல
வாருங்கள்!
முனனிலையும் படர்க்கையும்
எம்முடன் சேர்ந்தால்
நாளை அது எமகையில்.

- பாண்டியன்

# நீறு பூத்த சாம்பல் மேட்டில்...

ஏப்ரல் 5 ! இலங்கை ஒரு முறை குலுங்கியது! அதிகாலையில் ஊரடங்கு உத்தரவு நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டிருப்பதாய் இலங்கை வானொலி அலறியது! பயங்கர ஆயுதங்கள் தாங்கிய சேகுவேராக் கிளர்ச்சிக்காரர்கள் பல பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றி இருப்பதாகவும், 'ஜனநாயக ரீதியாக' மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை தூக்கியெறிய வன்முறையாளர்களும் குழப்பக்காரர்களும் முற்பட்டிருப்பதாகவும் செய்தி காற்றடித்த திசையெங்கும் காவிச் செல்லப்பட்டது. சேகுவேராக்கள், கிளர்ச்சிக்காரர்கள், பயங்கரவாதிகள், வன்முறைவாதிகள் எனப்பல பெயர்களில் அழைக்கப்பட்ட எதிரிகளைத் தேடி ஆயுதப்படையினர் அட்டகாசம்புரிந்தனர் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) என சிங்களத்திலும் மக்கள் விடுதலை முன்னணி என தமிழிலும் பெயர் குறித்த கிளர்ச்சியாளரைத் தேடிய வேட்டை தீவு முழுவதும் தொடர்ந்தது. சுமார் பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டனர். சுமார் பத்தாயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (குற்றவியல் நீதிக்கமிஷன் முன்பு நிறுத்தப்பட்ட இவர்களில் பலர் 1977இல் பொதுத்தேர்தலை அடுத்த ஆட்சி மாற்றத்தால் விடுதலை பெற்றனர்.) அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டு பொலிஸாருக்கும் ஆயுதப்படையினருக்கும் இஷ்டப்படி செயற்படும் உரிமை வழங்கப்பட்டது.

இந்த 1971 ஏப்ரல் 5இல் தொடங்கிய கிளர்ச்சியின் முனைப்பான வேகம் மூன்று மாதங்களுக்குள் அடக்கப்பட்டாலும் அரசியல் அரங்கில் இன்றுவரை நீறு பூத்த நெருப்பாகவே உள்ளது வெளிப்படை. 1971 ஏப்ரல் 5 இலங்கையின் அரசியலில் ஏற்படுத்திய தாக்கங்களும் அதிலிருந்து பெறப்பட வேண்டிய படிப்பினைகளும் முக்கியமானவையே 'சிங்கள மொழிமூலம் படித்த இளைஞர்களின் விதண்டாவாதத்தின் விளைவு'' என அப்போதைய நிதி அமைச்சர் என். எம். பெரேராவினால் வர்ணிக்கப்பட்ட இக் கிளர்ச்சியின் சூத்திரதாரிகளாக றோகண விஜேவீர, காமினியாப்பா, உப திஸ்ஸ கமநாயக்கா, லயனல் போபகே போன்றோர் விளங்கினர். நாடெங்கும் ஒரேநேரத்தில் திடீர்த்தாக்குதலை நடத்தி பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றுவதனூடாகவும், கொழும்பை நிலை குலையச் செய்வதனூடாகவும் அரசைத் தூக்கியெறிந்து விடலாம் என்ற எண்ணத்துடன் அவர்கள் செயற்பட்டிருக்கக் கூடும். இந்தக் கிளர்ச்சி நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்த போதிலும் 'ஜனநாயகத்' தேர்தலையும் 'பாராளுமன்ற' அரசியல் முறைக்கும் அப்பாற்பட்டதாக ஆயுதம் தாங்கிய போராட்டம் என்பதன் எண்ணக்கருவின் குறிகாட்டியாக கொள்ளப்படலாம். ''பாராளுமன்றம் கள்வர்களின் குகை'' என்ற எண்ணப்பாட்டிற்கும், பாராளுமன்ற ஆட்சி முறையின் கீழ் சாதாரண மக்களுக்கு நீதி கிட்டாது என்ற கருத்துக்கொளிற்கும் செயல் வடிவமாக இந்தக் கிளர்ச்சி அமைந்தது எனக் கொள்வதும் தவறில்லை எனலாம். புரட்சிகரமான புதிய சமூக அமைப்பை உருவாக்க கனவு கண்ட இளைஞர்களின் துணிச்சலான நடவடிக்கையை பாராட்டவும் பெறலாம். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பெரும் ஏமாற்றத்தையும், பாரிய பாதிப்புகளையும் இந்தக் கிளர்ச்சி தந்தது.

பாரம்பரியமான மரபுவழி இடதுசாரிகளிடமிருந்து மாறுபட்டுப் புதிய சிந்தனையோடான புரட்சியைத் தோற்றுவிக்கப்போவதாக சிங்கள இளைஞர்களுக்கிடையில் கூட சிங்கள-பௌத்த மேலாண்மை வாதம் மேலோங்கியிருந்தமையினை இந்தக் கிளர்ச்சி பிரதிபலித்தது. நாடெங்கிலும் கிளர்ச்சியை தோற்றுவிக்க எண்ணியவர்களின் சிந்தனையில் தமிழர்களின் இனவுணர்வுக்கு முக்கியத்துவம் இருந்திருக்கவில்லை எனலாம். தேசிய இனப்பிரச்சினை என்பதுவே முதலாளித்துவ வர்க்கம் ஆட்சிப் பீடத்தை தக்கவைத்துக் கொள்ள பயன்படுத்தும் பிளவுபடுத்தலுக்கான சதியே என்ற அர்த்தப் படுத்தல் கொண்ட இவர்கள் தமிழ் மக்கள் தமது தனித்துவத்தை அங்கீகரிக்க கோருவதை "வகுப்புவாதம்" என்றே இனங்கண்டனர். மேலும் மலையகத்தின் பெருந்தோட்டத் தொழிலாளர்களை அவர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் பிரதிநிதிகளாகவும் - நாட்டை விட்டு விரட்டப்பட வேண்டிய அந்நியராகவும் இனங்காட்டினர். இதன் பயனாக யாழ்ப்பாணச்சிறையில் வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜேவீராவை சிறைமீட்க தென்னிலங்கையிலிருந்து ஆட்கள் வரவும், யாழ்ப்பாணமே தெரியாத அவர்கள் பொலிசாரால் துரத்திப்பிடிக்கப்படவும் நேர்ந்தது. இந்தச் சம்பவம் ஒன்றே தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க தவறிவிட்டனர் என்பதைச் சுட்டிக்காட்டுவதாகும். இந்த நிலைகளுடன் டாவுடன் கைகோர்த்து வர்க்கப்புரட்சி செய்யக்கூடிய சிந்தனையாளர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது எனக்கூறலாம்.

அடுத்ததாக, ஜே.வி.பியினர் திடீர்ப் புரட்சி என்ற வகையில் பயன்படுத்திய இராணுவ யுக்தி பற்றிச் சிறிது கவனிக்கலாம். ஏறத்தாழ முப்பது பிரதேசத்தில் மேற்பட்ட இளைஞர்களைத் திரட்டி ஒரே நேரத்தில் திடீரெனக் காவல் நிலையங்கள் மீது தாக்குதல் தொடுத்து அரசைக் கைப்பற்றும் கங்கணம் கட்டியிருந்தனர். ஏன் இந்தப் போர் என்று தெளிவாகப் புரிந்து கொள்ளாத இருட்டிலிருந்த மக்களிடமிருந்து அந்நியப்பட்ட ஆயுதபாணிகளான இளைஞர்கள் மட்டுமே போராட்டத்தை நடத்தி முடித்து விடலாம் என்ற கற்பனையில் ஜே.வி.பி தலைமை அன்று

**இளையவன்**

மூழ்கியிருந்தது. கிராமப் புறத்து மக்களைச் சார்ந்து அவர்களை முன்னிலைப்படுத்திய போராட்டமாகவும் அல்லாமல், நகர்ப்புற கெரில்லா நடவடிக்கைகளாகவும் அல்லாமல் ஏற்படுத்தப்பட்ட கிளர்ச்சியின் தன்மையிலேயே அது இராணுவ ரீதியாக அடக்கப்படும் ஏதுக்களையும் கொண்டிருந்தது. இராணுவத் தோல்வியைச் சந்தித்த கைதிகளாக்கப்பட்ட கிளர்ச்சியின் முன்னோடிகளின் தமது சிந்தனைகளின் நியாயப்பாட்டை குற்றவியல் நீதிக்கமிஷன் முன்பாகத் தாமும் நிலைநாட்ட முடியவில்லை என்பது அரசியல் ரீதியாகவும் தனிமைப்படுத்தப்பட காரணமாகியது எனக் கூறலாம். இந்தக் கிளர்ச்சி நடவடிக்கைகளோடு சம்பந்தப்படாத தமிழ் மக்களும் பாதிக்கப்பட்ட விதத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திடீரெனப் பிரகடனம் செய்யப்பட்ட அவசர கால நிலையால் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்த முனைந்த ஒவ்வொரு சம்பவமும் அரசுக்கு எதிரான வன்முறையென முத்திரை குத்தப்படலாயிற்று. இதன் பயனாக அர்த்தமற்ற கைதுகளும், சித்திரவதைகளும் தொடர்கதையாகியது. சுவரில் கோஷம் எழுதுதல், சிங்கள எழுத்துகளுக்கு தார் பூசுதல் போன்ற செயல்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் கூட நீண்ட சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது விசாரணைகளெதுவுமின்றி தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் கொடிய - நெடிய சிறைவாசத்தை தமிழ் இளைஞர்கள் அனுபவிக்க நேர்ந்தது. இந்த அவசர கால நிலைமை என்ற ஒரே அதிகாரத்தின் கீழ் தமிழ் மக்களின் ஆன,மான உணர்வுகள் பலமாக நோகடிக்கப்பட்டன.

அதாவது ஜே.வி.பியினரின் கிளர்ச்சி நடவடிக்கை தோல்வியுற தமிழ் மக்களும் பொலிஸ் - இராணுவ அடக்குமுறைக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று எனினும் ஜே.வி.பியினரின் கிளர்ச்சி வெற்றி பெற்றிருந்தால் தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கலாம் என்ற எதிர்பார்ப்பை பொய்யாக்கும் விதமாகவே ஜே.வி.பியினர் பின்னாளில் நடந்து கொண்டு விட்டனர். ஆனாலும் இலங்கையில் அரசியலில் இருபது வருடங்களின் பின்பும் ஜே.வி.பியினரின் செயல்கள் அரசுக்கு அச்சமூட்டும் ஒன்றாக நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது எனக் கருதுவது தவறாகாது. ★

# நாங்கள் எங்கே போகிறோம் ?

''வீரவணக்கம் - கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனேற்று நடைபெற்ற மோதல் ஒன்றில் தர்சன் (ஆண்டி, ஜீவா - பெரியகடை, திருக்கோணமலை) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்'' இது கடந்த 22-0 -91 அன்று ஈழநாதம் பத்திரிகையில் வெளிவந்த செய்தி இந்தச் செய்திக்குப் பின்னால் வெளிவராத செய்தி ஒன்றும் உண்டு. அது சோகம் நிறைந்தது. இந்தப் போராளியின் பெற்றோர் திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து வடபகுதிக்கு வந்துவிட்டார்கள். ஆகவே இப்போராளியின் சடலத்தை இறுதிமுறையாகத் தானும் பார்த்துக் கண்ணீர்விட, மன ஆறுதல் பெற பெற்றோருக்குச்சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும், ஆகவே தங்களால் ஆன முயற்சிகள் அனைத்தையும் போராளிகள் மேற்கொண்டார்கள். பெற்றோர் இருக்கும் இடம் தெரியவில்லை எனவே ஒரு முகாமில் இவனுக்கான இறுதி மரியாதைகள் செய்யப்பட்டு மாவீரர் மயானத்தில் புகழுடல் தகனம் செய்யப்பட்டது.

''தமிழீழப் போராட்டத்தில் எதிரிகளிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்களில் கூடுதலான ஆயுதங்கள் மட்டக்களப்புப் பிராந்தியத்திலேயே பெறப்பட்டவை. இன்று கோட்டையில் புலிக்கொடி பறக்கின்றதென்றால் அதற்கு மட்டக்களப்புப் போராளிகளும் கணிசமான பங்காளிகள். கோட்டையை மீட்டெடுக்க உதவிய ஆயுதங்களில் கணிசமானவை மட்டக்களப்பில் பெறப்பட்டவை''. இந்த வாசகங்கள் குமரப்பா, புலேந்திரன் முதலான போராளிகளின் நினைவு தினக் கூட்டத்தில் நியூட்டன் என்ற போராளி ஆற்றிய உரையின் சிலபகுதிகள். இது 02-12-90 தினத்தன்று ஈழநாதத்தில் வெளிவந்திருந்தது.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் கிழக்கு மாகாணத்தின் பங்கு பற்றி விளங்கிக் கொள்ள இந்த சிறு உதாரணங்கள் போதும். இன்று போராட்டத்தில் சுமார் 2750க்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். குறிப்பிட்ட பிரதே

## சுய விமர்சனம்

சங்கள் எமது கட்டுப்பாட்டில் உள்ளன ஆனால் எமது மனவுணர்வுகள் எப்படியுள்ளன? போராட்டத்துக்கு முந்திய கால நிலைமையிலிருந்து எமது மண் எந்தளவுக்கு மாற்றம் பெற்றுள்ளது? இது சுயவிமர்சனம் செய்யப்பட வேண்டிய விடயம்.

தென் தமிழீழத்திலிருந்து (ஏறாவூர்) இடம் பெயர்ந்து வந்தவர்களான பிறேமானந்த் (வயது 6) சசிகலா (வயது 8) என்ற இரு மாணவர்களும் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பாடசாலையில் கல்வி கற்று வந்தார்கள். ஏனைய மாணவர்களைப் போலவே இலவசப் பாடப் புத்தகம் வழங்கப்பட்டது ஆனால் அடுத்தநாள் என்ன நடந்ததோ தெரியாது. அந்தப்பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட புத்தகங்களை வாங்கிய ஆசிரியை ''அகதிகளுக்கு இலவசப் புத்தகம் இல்லை. நீங்கள் மட்டக்களப்புக்கு ஓடுங்கோ, நாளைக்கு வந்தால் துலைப்பன'' என்று கூறி மாணவர்களை விரட்டி விட்டார். இச்செய்தி 27-03-91 பத்திரிகையில் வெளிவந்தது.

மக்களின் சிந்தனை விசாலமடையாதவரை இப்படியான சில நிகழ்வுகள் நடந்துவிடுகின்றன இத்தவறு நடந்ததும் அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை என்ன? இந்த விடயத்தில் மனோரீதியாக பாதிக்கப்பட்டவர் யார்? ஆனால் அந்தப் பாடசாலை அதிபரின் நடவடிக்கைகளோ தலை கீழாக இருந்தது. தவறுக்கு பரிகாரம் காண வேண்டிய அதிபர் தவறை மூடிமறைக்க முயன்று தொடர்ச்சியாகப் பல தவறுகள் நிகழ இடமளித்துவிட்டார். இதற்குக் காரணம் என்ன?மனிதாபிமானம் என்ற குணாம்சங்கள் குறைந்து எமது கௌரவம் என்பதை நிலைநாட்டவேண்டும என்ற நிலைக்கு அதிபர் சென்றதே. இதற்காக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராய்வோம்.

முதலாவதாக சக ஆசிரியைகள் பெற்றோரை மிரட்டினர். இந்தச்செய்தி தவறு என பத்திரிகையில் மறுப்புச் செய்தி போடாவிட்டால் நாங்கள் பகிஷ்கரிப்புச் செய்வோம்.. இப்படிப் பலவாறாக எச்சரிக்கை விடுத்தனர். நடைபெற்ற சம்பவம் எவ்வளவு பாரதூரமானது. எங்களது குழந்தைக்கு இப்படி நடந்தால் அது எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கும். இதை எல்லாம் சிந்திக்க அவர்கள் தயாராக இல்லை.

ஆசிரியையில் தவறு இல்லை என நிரூபிக்க அதிபர் எம்மை அழைத்தார். பாடசாலையின் கௌரவம் பாழாய்ப்போய் விட்டது உங்கள் பத்திரிகைச் செய்தியால் என்று குற்றம் சாட்டினார். அவரது கடைக்கண் பார்வை குழந்தைகளின் உணர்வைப் புரிந்து கொள்ள மறுத்தது. இதேவேளை சில நலன்விரும்பிகள் இவ்விடயத்தில் தலையிட்டார்கள். குழந்தைகள் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டார்கள். அனைவர் முன்னிலையிலும் குழந்தைகள் நடந்ததைக் கூறினர். நீதிமன்றங்களிலே மெத்தப் படித்த மேதாவிகளின் சாட்சியங்களை விட குழந்தைகளின் சாட்சியமே உண்மையானது என ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தக் கசப்பான உண்மையை விழுங்கிக் கொள்ள சிரமமாயிருந்தது அதிபருக்கு. அடுத்த முயற்சியைத் தொடர்ந்தார்.

எமது அலுவலகத்தைத் தேடி மாணவிகள் கூட்டமொன்று வந்தது ''உங்களது பத்திரிகையில் இப்படிச் செய்தி வந்து விட்டது, நாளைக்கு நாங்கள் ரியூசனுக்குப் போகும் போது இந்தப் பள்ளிக்கூடமோ நீங்கள் என்று எம்மை யாராவது கேட்டால் எமக்கு மரியாதை இல்லை. ஆகவே பெரியதாக செய்தி போடுங்கள் நீங்கள் போட்ட செய்தி தவறென்று என்றார் ஒரு மாணவி ''ஆறு வயதுப் பிள்ளையும் எட்டு வயதுப்பிள்ளையும் நடந்ததை எப்படி விபரமாகக் கூறுவர்?'' குறுக்கு விசாரணையில் ஜீ ஜீ பொன்னம்பலம் பிறந்த அந்த மண்ணைச் சேர்ந்தவர்தான் என்பதை நிரூபித்தார் ஒரு மாணவி. எங்களிடம் தாயார் இச்செய்தியை மறுத்தாரே என்று தொடங்கிய ஒரு மாணவி ''நான்தான் அச்செய்தியைக் கொண்டு வந்தேன். நான் நேரடியாக தாயையும் பிள்ளைகளையும் சந்தித்தவன்'' என்று எமது நிருபர் கூறியதும் வாயடங்கினார். உங்களது நடைமுறை தவறானது. இவ்விடயம் தொடர்பாக அதிபரே எழுத்துமூலம் விளக்கமளிக்க வேண்டும், அப்படிச் செய்தால் நாம் பிரசுரிப்போம். அந்த வேளை எமது செய்தி எவ்வளவு உண்மையானது என்பதை ஆதாரங்களுடன் மக்கள் முன்வைப்போம் என்று பதிலளித்தார் பிரதம ஆசிரியர். இறுதியில் மாணவிகள் சென்றனர். எமக்கு இதயம் கனத்தது.

அந்தமாணவிகள் 15 அல்லது 16 வயதானவர்கள். இயல்பாகவே இந்தவயது அநீதிகளைக் கண்டு மனம் பொறுக்க முடியாத வயது. ஆனால் இந்த மாணவிகள் ரியூசனுக்குப் போகும் இடத்தில யாராவது கேட்டால் மரியாதையில்லையே என்று நினைக்கும் இம் மாணவியால் ஏன் மனிதாபிமான ரீதியில் அந்தக் குழந்தையின் நிலையைப் புரி

(6ஆம் பக்கம் பார்க்க)

> இந்த மண்ணையும் போராட்டத்தையும் நேசிக்கும் சக்திகள் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதில்தான் போராட்டத்தின் வெற்றியே தங்கியுள்ளது.

# தமிழ் மாணவருக்கான பாடநூல்களின் தன்மைகள்

தமிழ் மாணவருக்கான பாடநூலகள் முன்னர் தனியார் துறையினரால் எழுதப்பட்டு பாட நூல் சபையின் அங்கீகாரம் பெற்று கற்பிக்கப்பட்டு வந்தன அப்போது தமிழர் வரலாறு, பூகோள விபரம், சூழல் பற்றிய விளக்கம தமிழ் கலை கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கட்டுரை. கதைகள், கவிதைகள் வெளியிடப்பட்டன

இலவசக் கல்வியின் முழுப் பயனையும பெறுவதற்குப் பாட நூல்களையும் இலவசமாக வழங்க வேண்டுமென்று 1980 ஆம் ஆண்டிலிருந்து இலவசபபாட நூல்கள் மாணவருக்குக் கிடைத்து வருகின்றன.

ஆரம்பத்தில் இந்நூல்கள் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துற்கும் தமிழுக்கும் மொழி பெயர்க்கப்பட்டன. பின்னர் சிங்களத்தில் எழுதப்பட்டு தமிழில் மொழிபெயக்கப் பட்டன இதனால் சிங்களத்தில் எழுதப்பட்ட சிங்களப் பெயர்களே தமிழர் பாட நூலகளிலும் இடம் பெற்றன. சிங்களப் பாடநூலகளில் வெளிவரும் முகப்பு அட்டைப் படமும் அப்படியே இருந்தது.

நாடு முழுவதிலுமுள்ள தமிழ் முஸ்லிம் மாணவருக்காக ஒரே பாடநூலே வெளிவருகின்றது அந்தப்பாடநூல்களில் விகிதாசாரப்படியாயினும் பாடங்கள் இடம்பெறவல்லை. இதனை இந்நாட்டிலுள்ள எந்தப் பொதுஸ்தாபனமும் கல்வி அமைப்புக்களும் சுட்டிக் காட்டவும் முன் வரவில்லை. இலவச நூல்தானே என்ற நினைவில் அந்நூலில் அடங்கிய விடயங்களை அலசி ஆராயவும் முன் வரவில்லை.

அவ்வப் போது பாடநூல் குறைபாடுகள் பற்றி தனிப்பட்ட சிலரால் சுட்டிக்காட்டப்பட்ட தவறுகளும் ஆடிக் காற்றுக்கு அள்ளுண்டுபோகும் சருகுகளும் சப்பிகளுமாக ஆகி விட்டன.

தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கரிசனை உள்ள அமைப்புக்களும் அறிஞர்களும் தொழிற்சங்கங்களும் 1991 ஆம் ஆண்டுக்கு வெளிவந்துள்ள தமிழ் மாணவருக்கான தமிழ் இலவச பாடநூலில் காணப்படும் பாடங்களையும் அவற்றின் தன்மைகளையும் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களாக.

தமிழ் ஆண்டு 4 மூன்றாம் பாடம் ஒளவையின் புலமை.

ஐந்தாம் பாடம் சட்டி குட்டி போடும் என்றால் (நஸ்றாதீன் முல்லா என்னும் விகட கவி பற்றியது)

ஆறாம் பாடம் உயிர்களில் அன்பாயிருத்தல் (புத்தர் பற்பது)

ஏழாம் பாடம் நல்ல தீர்ப்பு (மரியாதை இராமன் கதை)

பத்தாம் பாடம் விபுலானந்த அடிகள்

பதினாறாம் பாடம் அபூநவாஸ்

இருபதாம் பாடம் உயிர் கொடுத்த உத்தமி (இரண்டாம் இராசசிங்கன் கதை)

இருபத்திரண்டாம் பாடம் கொண்டாடினரன் ஒடியற்கூழ் (கல்லடிவேலுப்பிள்ளைபற்றியது.)

இருபத்தைந்தாம் பாடம் குற்றம் செய்தவர் யார்? (யேசுநாதர் பற்றியது)

இருபத்தேழாம் பாடம் உழைப்பில் நேர்மை (அரேபியா நாட்டுக் கதை)

4 ஆம் ஆண்டு தமிழ் (3 ஆம் வகுப்பு) ஒன்பது வயது மாணவனுக்காக எழுதப்பட்ட பாட நூல் இது. இந்த மாணவன் ஒளவையைப் பற்றியும் மரியாதை இராமன் பற்றியும் விபுலானந்த அடிகள் பற்றியும் கல்லடி வேலுப்பிள்ளை பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது

இவர்களுடன் நஸ்ருதீன் முல்லா பற்றியும், புத்தர் பற்றியும், அபூநவாஸ் பற்றியும் இராசசிங்கன் பற்றியும், யேசுநாதர் பற்றியும் அரேபிய நாட்டுக்கதை பற்றியும் அதிகம் தெரிந்து கொளள வேண்டியுள்ளது. தமிழர் முஸ்லிம் மாணவர் விகிதாசாரப்படி பார்த்தாலே விகிதாசாரத்தில் கூடிய தமிழர் மாணவருக்காக இந் நூல் எழுதப்படவில்லை என்பது தெட்டத் தெளிவாகின்றது.

இந்தப்பாட நூல் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிப்போரைப் பார்ப்போம். பேராசிரியர் ஆ சதாசிவம், கலாநிதி சிரோன்மணி இராசரத்தினம், கோ கோணேசபிள்ளை இராசேஸ்வரி செல்வரத்தினம் புஷ்பா சிவகுமாரன், எம். எச். எம் ஜவ்பர் ஒரே ஒரு முஸ்லிம் இடம் பெற்ற இச் சபையில் பிற கலாசாரத்திற்கு அதிக இடம் எப்படிக் கிடைத்தது?

இலவச பாடநூல் 6 ஆம் ஆண்டு பதினொரு வயது மாணவனுக்காக எழுதப்பட்டது இப்பாடநூலில் கண்டிப் பெரஹரா, அறிஞர். அறபி பாஷா, அறிஞர் ஓ. எம். ஓ அனிஸ் என 14 பாடங்கள் அமைகின்றன.

தமிழர் பற்றிய விடயங்கள் இப்பாட நூலில் பின்தள்ளப் பட்டுள்ளன.

தமிழ் வளர்த்த சி வை. தாமோதரம்பிள்ளை பற்றி 39 ஆவது பாடம் குறிப்பிடுகின்றது.

தற்போது வெளிவந்துள்ள 6 ஆம் ஆண்டு தமிழ் நூலில் இதற்கு முன்னர் வெளிவந்துள்ள தமிழ் நூலில் காணப்பட்ட பல பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன. முன்னைய புத்தகத்தில் 5 ஆம் பாடம் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பற்றியது. புதிய தமிழ் பதிப்பில் சோமசுந்தரப் புலவர் பாடம் நீக்கப்பட்டுள்ளது.

எல்லாளன் பற்றி நான்கு பக்க கட்டுரை முன்னைய

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நாங்கள்...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ந்து கொள்ள முடியவில்லை. இது கௌரவமே பெரிது என்று அடம்பிடிக்கும் சராசரியான எமது மக்களின் மனோபாவமா? அல்லது போராட்ட உணர்வை வளர்க்காத, எமது சகோதரர்களின் துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் உணர்வை வளர்க்காத எமது கல்வியின் குறைபாடா?

படியிறங்கிச் சென்ற மாணவிகள் "இனி நாங்கள் மேலிடத்துக்குத் தான் போகவேண்டும்" என்று சொல்லிவிட்டுப் போனார்கள். "காணி வித்தாவது அப்பீல் கோர்ட் வரைக்கும் வழக்காடுவன்" என்று அந்தக் காலத்தில் சிலர் சூளுரைப்பதைப் போன்றே இருந்தது அவர்களது நடத்தை. இது எமது மண்ணின் பரம்பரைச் சீதனம்.

மாலையில் அதிபர் இச் செய்தி தவறானது என்று எழுத்துமூலம் மறுப்புச் செய்தி தந்தார். அதேவேளை அடுத்த நாள் பாடசாலையில் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் என்ற செய்தி எமது காதில் பட்டது. அதிபரிடம் சென்றோம். அங்கு எமக்கும் ஆசிரியருக்குமிடையில் இவ்வாறாக உரையாடல் தொடர்ந்தது. ஏன் இன்று பரீட்சைகள் நடைபெற வில்லை? ஆசிரியர்கள் நேற்றைய செய்தியால் மனமுடைந்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இது தொடர்பாக கல்வித்திணைக்களத்துக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்தீர்களா? இல்லை. ஆசிரியர்கள் இன்று வேலைக்கு வந்ததாக கையொப்பமிட்டுள்ளார்களா? ஆம், கையொப்பமிட்டு விட்டுத் தானா வேலைநிறுத்தம்? (மௌனம்) இந்தச் செய்தி பொய்யானது என்று கருதுகிறீர்களா? வந்து... குழந்தையும், தாயும் என்னிடம சொன்னார்கள் தான் அப்படியானால் இந்த வேலை நிறுத்தம் ஈழநாதத்துக்கு எதிராகவா? பெற்றோருக்கு எதிராகவா? ஈழநாதத்துக்கு எதிராக அல்ல அப்படியானால் பெற்றோருக்கு எதிராகவா? (மௌ[illegible]ர்ந்து சென்ற [illegible]டலகள இவ் விடயத வசியமில்லாதவை யாதலால் அவற்றைத் தவிர்ப்போம்.

எமக்கும் அதிபருக்குமிடையே நடைபெற்ற உரையாடல்களைக் கேட்ட ஆசிரியர்கள் "தம்பி இந்த விஷயத்தை இத்துடன் விட்டுவிடுவோம்." என்று வேண்டிக் கொண்டார்கள். ஆனால் அடுத்தநாள் வந்த கடிதமொன்று இச் செய்தியை மறுத்திருந்தது. ஆசிரியர்கள் இதில் கையொப்பமிட்டிருந்தனர். எம்மை தமது அலுவலகத்தில் வந்து சந்திக்கும்படி அதிபர் எழுதியகடிதம், அதிபரின் மறுப்புக் கடிதம், ஆசிரியர்களின் மறுப்புக் கடிதம் ஒரே கையெழுத்தில். நாம் எங்கே போகிறோம்? இந்த மாதிரியான சிந்தனையுள்ளவர்கள் மாணவர்களை எவ்விதம் வழிநடத்துவார்கள்? இவர்களைப் போன்ற ஒருசில ஆசிரியர்களின் செயல் முழு ஆசிரிய உலகிற்குமல்லவா அவமானத்தை ஏற்படுத்தும்?

புத்தகத்தை இழந்துவிட்டு வந்த குழந்தையிடம் ஏன் இன்று பள்ளிக்கூடம் போகவில்லை என்று நாம் கேட்டதும் அந்தக் குழந்தையின் கண்ணில் இருந்து வீழ்ந்த கண்ணீர்; எத்தனையோ பள்ளிக் கூடத்துக்கு போனதுக்குப் பிறகுதான் இந்தப் பள்ளிக் கூடத்துக்கு வந்தம் ஏன் நாங்கள் சும்மா சொல்லப்போகிறோம்? என்ற அந்தத்தாயின் அப்பாவித்தனமான கேள்வி; உன்னால்தானே எல்லாம் வந்தது என்று எமது சமூக அமைப்பில் உள்ள ஆத்திரத்தால் குழந்தையின் முதுகில் வரிகளை இட்ட அந்தத் தந்தையின் நிலை; இவையெல்லாம் எம்மைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகின்றன நாம் என்ன செய்யப்போகிறோம்? இந்த நிலையைத் தொடரவிடப் போகிறோமா? இப்படியான நிலையை எவரும் அனுமதிக்க முடியாது.

இந்த மண்ணையும் போராட்டத்தையும் நேசிக்கும் சக்திகள் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதில்தான் போராட்டத்தின் வெற்றியே தங்கியுள்ளது.

— கரும்பறவை

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கேள்விகள்...

வீதியின் அருகே போடப் பட்டிருந்த புகையிரதப்பாதையைக் காட்டிக் கேட்டான். அவன் இவனுக்கிருந்த களைப்பில், மகனின் கேள்விக்கு பதில் சொல்வதும், அந்தபதிலிலேயே மகன் கேள்விகளைத் தொடுப்பதும் பின் அவற்றிற்கு பதுல் சொல்ல, மறுபடியும் மகன் கேள்வி கேட்க...

இவனுக்குத் தெரியும் மகனின் துடுக்குத்தனம் பற்றி. இவன்மகனின்பேச்சைக்காதில் வாங்காதது போல மௌனமாக வந்தான்.

பரதன் திரும்பவும் அழுத்தமாகக் கேட்டான்.

'இது பரதன் இதாலதான் 'றெயின்' போறது' இவனின் பதிலை மனைவி கூறினாள்.

'றெயினோ அம்மா. அது என்ன'

மகனுக்கு றெயின் என்றால் என்னவென்று தெரியாது. அவனுக்கு மட்டுமல்ல. இந்த வயதுப் பிள்ளையள் எதற்கும் றெயினையோ, சரியாக நகரையோ தெரியாது இந்தப்பிள்ளைகள் பாடசாலைக்குப் போய் புகையிரதத்தைப் பற்றியோ, விமானங்களைப் பற்றியோ படிக்கும் பொழுது அவற்றைப் புரியவைக்க ஆசிரியர்கள் என்ன செய்வார்களோ என்ற எண்ணம் வந்தது.

ஆனாலும் இப்போதைக்கு தன் பணியின்படி கூறவேண்டியதை கூற வேண்டும் என நினைத்தான்.

'சுக்கு ... சுக்கு ... என்று போகும் தம்பி. இரும்பிலதான் சில்லுகள் இருக்கும் நீளமான வண்டி, நிறையப் பெட்டிகள் பூட்டிவரும். அதில ஆட்கள் ஏறிப் போவினம்' என்றான்.

இவன் பதில் சொல்லும் விதத்தைக் கேட்டு மனைவி சிரித்தாள். 'இவனுக்கு இப்ப இதுதான் தேவை நேரம் போகுது. கெதியாய்ப்போவம்' என்றாள் அவள்.

'அப்பா இனி எப்ப றெயின் வரும்' இனி றெயின் வருமா? இதற்கென்ன பதிலைக் கூறுவது? குழந்தைக்கு பொய் சொல்லவும் கூடாது. சிறிது நேரம் மௌனமாகவே வந்தான்.

'இனி எப்ப றெயின்' வருமப்பா'

'நாங்கள் எப்ப பயம் இல்லாமல் இருக்கிறமோ அன்றைக்குத்தான் ராசா றெயின் வரும். இவனின் பதிலில் மனதின் ஆதங்கம் வெளிப்பட்டது. அப்பாவின் பதில் பரதனுக்குப் புரிந்ததோ என்னவோ அவன் பின்பு ஒன்றும் பேசவில்லை.

ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டார்கள். 'சைக்கிளை' அதை நிறுத்துமிடத்தில் நிறுத்தி பூட்டிவிட்டு ஆஸ்பத்திரியினுள் நுழைந்தனர். இவர்கள் நுழையவும், நடுத்தரவயதுப் பெண் ஒருத்தி தன் பிள்ளையுடன் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். பிள்ளைக்கு கடும் சுகயீனமாக இருந்தது. அவசர சிகிச்சைக்காக மேல்வைத்தியசாலைக்கு பிள்ளையை அனுப்ப வேண்டியிருந்தது.

'அம்புலன்ஸ் வண்டி நின்றது. பின் ஏன் தாமதம்?'

இவன் மனைவியையும் பிள்ளைகளையும் ஓரமாக இருத்திவிட்டு அந்தப் பிள்ளையின் நிலையை அறிய அந்தப்பெண்ணருகில் வந்தான். அவரின் அருகில் வேறும் சிலர் நின்றனர். எல்லோரும் அனுதாபப் பட்டனர்.

'எரிபொருள் இல்லை; அதனால் குழந்தையை அனுப்பி வைக்க முடியவில்லை. எங்களுக்கும் கவலைதான்' என தாதி ஒருத்தி சொன்னாள். குழந்தை வருத்தத்தில் துன்பம் அடைந்தது. இவனுக்கு இவற்றைப் பார்க்க துயர் நெஞ்சைப் பிழிந்தது.

பரதன் இவனின் கையைப் பிடித்தபடி கேட்டான்.

'அந்த அக்காவுக்கு ஊசி போடப் போகினமா'

'ஓமோம்' என்று இவன் மொட்டையாகப்பதில் சொன்னான்.

அம்புலன்ஸ் வண்டிக்கு எரிபொருள் வாங்க வெளியே போயிருந்த அந்தப் பெண்ணின் கணவன் எரிபொருளுடன் திரும்பி வந்தான். உடன் வண்டியை புறப்படத் தயார் படுத்தினான் வண்டிச்சாரதி.

வைத்தியரும் தாதிகளும் அவசர அவசரமாக ஒழுங்குகளைச் செய்தனர்.

ஆஸ்பத்திரியின் மருந்து. மணம் மூக்கினுள் நுழைந்தது தாதிகள் அவசரஅவசரமாக அலுவலகத்திற்கும் 'வார்ட்'டுக்குமாக விரைந்து ஏதோ செய்தனர்.

அதற்கிடையில்,

அந்தப் பெண்ணின் பிள்ளை போய்விட்டது.

'ஏனப்பா அக்காவுக்கு என்ன' — பரதன் இவனிடம் கேட்டான்.

இவனால் பதில் கூற முடியவில்லை. மனம் துக்கித்தது.

'அக்காவுக்கு என்ன' பரதன் திரும்பவும் கேட்டான்.

'அக்கா செத்துப் போயிட்டான்'

'ஏன் செத்தது'

என்ன பதில் சொல்வது? இவன் மனைவியையும், பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு உள்ளே போனான்.

'நாங்கள் தமிழராகப் பிறந்ததாலதான் இவ்வளவும். இன்னும் எத்தனை காலம் இப்படியிருக்கும்...' என்றபடி மனைவியும் பின் தொடர்ந்தாள்.

நெஞ்சில் கனம் அதிகமாக இருந்தது.

—


# விக்னா

## கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**A/L 91** மீட்டல் பிரிவு 2
Day Classes

**ஆரம்பம்: 08-04-1991** (காலை 8-00 மணி)

| | | |
|---|---|---|
| பொருளியல் | : | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | : | திரு. இரத்ணம் |
| கணக்கியல் | : | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | : | திருமதி. மதி |

மற்றும் அனைத்து பாடங்களும்.

மு. குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது.

(B-2808)

குர்திஷ் இனப் போராளிகளுக்கும் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் ஆதரவுப் படைகளுக்குமான மோதல், முஜாகிதீன் கெரில்லாக்களுக்கும் ஆப்கான் இராணுவத்திற்கும் இடையிலான மோதல், விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா ஆயுதப்படையினருக்கும் இடையிலான மோதல் என்பன உலகில் கடந்த வாரம் முனைப்புப்பெற்ற நிகழ்வுகளாக இருந்தன.

# கடந்த வார போராட்ட களங்கள்

### வளைகுடாவில் குர்திஷ்

வளைகுடாப்போரில் அமெரிக்கசார்பு அணியினால் ஈராக் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சியினை குர்திஷ் இனப் போராளிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தனர். இதற்கு துருக்கியும் சிரியாவும் ஈரானும் ஆதரவு கொடுத்தன. அத்தோடு ஈராக் விவகாரத்தில் குறிப்பாக சதாம் ஹுசைன் தொடர்பாக அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் நடந்து கொண்ட விதமும் குர்திஷ் போராளிகளுக்கு நம்பிக்கையைக் கொடுத்தன.

இந்த நிலையில் வளைகுடாப் போர் முடிந்தவுடனேயே குர்திஷ் போராளிகள் ஈராக்கில் உள்ள குர்திஷ் மக்கள் வாழும் நிலப்பகுதியின் பெரும் பகுதியை (90 வீதத்திற்குமேல்) தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இவற்றுள் ஈராக்கிய எண்ணை வயல்கள் நிரம்பிய கிர்குக் நகர் பகுதியும் அடங்கி இருந்தது.

குர்திஷ் போராளிகளுக்கு தமது மண்ணிலிருந்து சதாம் ஹுசைன் இராணுவத்தினரை வெளியேற்றுவதற்கும் அண்டை நாடுகள் கொடுத்த ஆதரவும் ஈராக்கின் தென்பகுதியில் நடந்த சியா முஸ்லிம்களின் கிளர்ச்சியும் பெரும் வாய்ப்பாக அமைந்தது. அதே வேளை அமெரிக்காவின் தாக்குதலினால் சிதறிப் போய்க் கிடந்த ஈராக்கிய இராணுவத்தினாலும் மோதலைச் சந்திக்க முடியவில்லை. ஆனால் குர்திஷ் போராளிகள் எதிர்பார்த்த சாதகமாகத் தொடர்ந்து வந்த நிலைமை அமையவில்லை. அமெரிக்காவும் மேற்கத்தைய நாடுகளும் ஈராக் விவகாரத்தில் குர்திஷ் போராளிகள் எதிர்பார்த்தபடி நடந்து கொள்ளாத அதே வேளையில் ஈராக் இராணுவம் தனது சீர்குலைவுகளில் இருந்து தன்னை சீர்படுத்திக் கொண்டது. மேலும் தென் ஈராக்கில் சியா முஸ்லிம்களின் கிளர்ச்சியையும் அடக்குவதில் வெற்றி கண்டது.

குர்திஷ் போராளிகள் தோல்வி அடைந்த ஈராக் இராணுவம் மீது அது முழுமையாகச் செயற்படாத அளவுக்கு கட்டுப்பாடுகளை அமெரிக்கா விதிக்கும் என்றே எதிர்பார்த்தனர். ஆனால் அமெரிக்கா ஈராக்கின் விமானப்படை நடவடிக்கை மட்டுமே ஓரளவு கட்டுப்பாட்டை விதித்தது. அதிலும் கடைசி நேரத்தில் தளர்வைக் காட்டியது.

இதற்குப் பிரதான காரணியாக அமைந்தது ஈராக்கின் தெற்கில் ஏற்பட்ட சியா முஸ்லிம்களின் கிளர்ச்சியாகும்; சியா முஸ்லிம் கிளர்ச்சியை நேரடியாக அடக்க முடியாத அமெரிக்கா அச்சந்தர்ப்பத்தை ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுக்கே வழங்கியது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய அதிபர் சதாம் ஹுசைன் குர்திஷ் போராளிகளை இரும்புக்கரம் கொண்டு நசுக்கினார்.

குர்திஷ் போராளிகள் தாம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்காமையினாலும் தமது அரசியற் கணிப்பீட்டில் ஏற்பட்ட தவறினாலும் மீண்டும் தமது மண்ணில் இருந்து வெளியேற வேண்டிவந்தது. அத்தோடு இதுவரை காலமும் இல்லாதவாறு ஈராக்கிய இராணுவம் வஞ்சம் தீர்க்கும் கொலைகளும் என்று அஞ்சிய 3.5 மில்லியன் குர்திஷ் இன மக்களும் தமது குடியிருப்புக்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். அதே வேளை குர்திஷ் இனப்போராளிகளுக்கு மறைமுக ஆதரவை கொடுத்த பின்னர் நெருக்கடியின்போது கைவிட்ட அமெரிக்கா தற்போது குர்திஷ் இனத்தவரின் மனிதாபிமானத் தேவைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு முன்வந்துள்ளது.

சுருக்கக் கூறின், குர்திஷ் மக்கள் மீண்டும் ஒரு முறை ஏமாற்றப்பட்டு விட்டார்கள். முதலாம் உலக மகாயுத்தம் முடிந்தபோது பிரிட்டன் உட்பட மேற்கு அணியினரும் ஒட்டோமன் பேரரசும் செய்த துரோகத்தினால் பிளவுபட்ட குர்திஷ் நிலப்பரப்பு காலத்திற்குக் காலம் தனது விடுதலைக்காக இரத்தம் சிந்திக்கொண்டிருக்கின்றது. ஆனால் பாதை நீண்டதாகவே உள்ளது.

### தென்மேற்கு ஆசியாவில் ஆப்கான்

ஆப்கானிஸ்தானின் கிழக்குப்பகுதி நகரான கோஸ்ட்நகர் இவ்வாரம் முஜாகிதீன் கெரில்லாக்களின் கைகளில் வீழ்ந்து விட்டது. இதனை ஆப்கானிஸ்தானின் நஜிபுல்லா அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு சோவியத் இராணுவம் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறியதும் இரண்டு மாதத்திற்குள் ஆப்கானிஸ்தானின் நஜிபுல்லா தலைமையிலான இடதுசாரி அரசாங்கமே முஜாகிதீன் கெரில்லாக்களிடம் வீழ்ச்சி கண்டுவிடும் என மேற்கத்தைய இராஜதந்திரிகளால் கணிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் எதிர்பார்த்தபடி நஜிபுல்லா அரசாங்கம் வீழ்ச்சியடையவில்லை.

மாறாக கிழக்கு ஆப்கானிஸ்தானின் தலைநகரான ஜலலாபாத்தைக் கைப்பற்ற கெரில்லாக்கள் எடுத்த தீவிர தாக்குதல் நடவடிக்கைகள் ஆப்கானிஸ்தான் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டதோடு சோவியத் காலத்தில் கெரில்லாக்கள் நிலைகொண்டிருந்த பகுதியில் இருந்தும்கூட சற்றுப் பின்தள்ளப்பட்டனர்.

## ஜெயா

ஜலலாபாத் மீது மேற்கொண்ட தாக்குதலின்போது கோஸ்ட் நகரின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இவை ஆப்கானிஸ்தான் இராணுவத்தால் முறியடிக்கப்பட்டன.

பின்னர் முஜாகிதீன் கெரில்லாக்களின் போராட்டம் சற்றுப் பின்னடைந்து காணப்பட்டது. இதற்கு கெரில்லா அமைப்புகளுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு, அமெரிக்க சோவியத் உறவில் ஏற்பட்ட நெருக்கம், பாகிஸ்தான் அமெரிக்க உறவில் ஏற்பட்ட இடைவெளி என்பன காரணங்கள் ஆகின.

தற்பொழுது மீண்டும் பதினைந்து நாள் சண்டையின் பின்னர் கோஸ்ட் நகரை கெரில்லாக்கள் கைப்பற்றியுள்ளனர். கெரில்லாக்களுக்கு இந்நகர் வீழ்ச்சி அடைந்ததற்கு பாகிஸ்தான் இராணுவம் மீது குற்றம் சாட்டிய ஆப்கான் அரசாங்கம் கோஸ்ட் நகர ஆப்கானிஸ்தான் படைநிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவமே ஏவுகணைகளை இயக்கியதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

அதேவேளை, ஆப்கானிஸ்தான் கடும் ஏவுகணைத் தாக்குதலையும், விமானத் தாக்குதலையும் மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

சில மாதங்களில் நாட்டையே பிடித்து விடலாம் என எண்ணிய முஜாகிதீன் கெரில்லாக்களுக்கு கோஸ்ட் நகரைப்பிடிக்க ஏறத்தாழ இரண்டு வருடங்கள் தேவையாக இருந்தது. மேற்கத்தைய ஆதரவில் முழுமையாக வளர்க்கப்பட்ட இக் கெரில்லா அமைப்புகள் (ஈரான்சார்பும் கூட) ஈராக் - அமெரிக்கப் போரின் போது அமெரிக்க சார்பு கூட்டணியினருடன் சேர்ந்து ஈராக்கிற்கு எதிரான போராட்டத்தில் இறங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், இன்று தென் மேற்கு ஆசியாவில் இஸ்லாமிய அடிப்படை வாதம் தீவிரமாகப் பரவி வரும் வேளையில், அமெரிக்காவின் உதவி இவர்களுக்கு தொடர்ந்து கிடைக்குமா என்பதும் சந்தேகத்திற்குரியதே. இதனை வலியுறுத்துமாப் போல், பாகிஸ்தான், அமெரிக்க உறவில் ஏற்பட்ட விரிசல் கெரில்லாக்களைப் பெரிதாகப் பாதித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் காபூல் வீழ்ச்சி அடையும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்துள்ள முஜாகிதீன் கெரில்லாக்களின் தலைவர்கள் அதனை வெற்றிப் பாதையில் இட்டுச் செல்வதானால் தமது உறவு நிலைகளை மறுபரிசீலனை செய்வது தவிர்க்க முடியாததாகும்.

### தென்னாசியாவில் தமிழீழம்

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே கடந்த வருடம் ஜூன் மாதம் மீண்டும் ஏற்பட்ட மோதல்கள் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் உள்ளன. உலகின் ஏனைய பகுதிகளில் நிகழும் போராட்டங்களைப் போன்று இல்லாமல் தொடர்ச்சியான மோதல்களாக இப்போராட்டம் உள்ளது.

இம்மோதல்கள் கடந்த வாரம் மேலும் தீவிரம் பெற்றது. குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இறந்துள்ள சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவின் திட்டத்தின் அடிப்படையில் இத்தாக்குதல் நடவடிக்கையானது சிறிலங்கா இராணுவம் திட்டமிட்டிருந்த ஒரு வருடத்திற்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தளபதியின் கூற்றுப்படி இந்த இராணுவ நடவடிக்கையானது விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள வடக்குப் பகுதியில், குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இருந்து புலிகளை விரட்டுவதாகும். ஆனால் போர் நடவடிக்கைகள் ஆரம்பமாகி ஒரு வாரமாகியும் சிறிலங்கா இராணுவம் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாத அதே வேளை எதிர்பாராத தோல்விகளையும் சந்தித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் வெப்பங்குளப் பகுதியில் விடுதலைப் புலிகளிடம் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வி முக்கியமானதாகும். அக்கோர தாக்குதலில் இருவாரங்களுக்கு முன் ஏற்பட்ட இழப்பும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கடந்த மாதத்தில் ஜெனரல் ரஞ்சன் விஜேரட்ன உட்பட 209 ஆயுதப்படையினர் உயிரிழந்துள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி அழித்தொழித்த பின் தமது விருப்பிய விதத்தில் பேச்சுவார்த்தைகளைப் புலிகள் மீது திணிக்க எண்ணும் சிறிலங்கா அரசாங்கத்தின் விருப்பம் சாத்தியப்படுவதற்கான வாய்ப்பு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

அதேவேளை, உலகின் பல பாகங்களிலும் உள்ள விடுதலைப் போராளிகளுக்கு வெளிநாடுகளின் நேரடி ஒத்துழைப்புகளும் உதவிகளும் உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அத்தகைய நேரடி ஒத்துழைப்போ உதவிகளோ இல்லை என்பதும் கவனிக்கக் கூடியதாகவுள்ளது.

அத்தோடு தமிழீழ மக்கள் போர்க்களத்திலேயே இருப்பதினால் இராணுவத்தினரின் தாக்குதல்களை எதிர்கொண்டு வருகின்ற அதே வேளை, இங்கு மேற்கொள்ளப்படுகின்ற போராட்டங்களைப் புலிகளே நேரடியாகத் தீர்மானிக்கிறார்கள். இந்நிலையில் உலகில் உள்ள ஏனைய போராளிகளை விட விடுதலைப்புலிகள் சார்பில் முழுப்பலம் பொருந்தியவர்களாகவே உள்ளனர்.

## மேற்கு வங்க தேர்தல்

மேற்கு வங்காளசட்டசபைக்கான தேர்தல் லோக்சபா தேர்தலுடன் நடத்தப் படும் என இந்தியத் தேர்தல் கமிசனின் தலைவர் டி.என்.சேஷன் நேற்றுடில்லியில் தெரிவித்தார்.

### நீர் மூழ்கியின் அடிப்படை

ஒரு பெரிய மூடிய கொள்கலன். அதனுள் இன்னுமொரு சற்றுச் சிறிய மூடிய கொள்கலன் கொண்ட அமைப்பு நீர் மூழ்கியாகும். சிறிய கொள்கலனுள் கருவிகள் மனிதர் இருக்கலாம். இரண்டு கொள்கலனுக்கும் இடைப்பட்ட பகுதி எவ்வளவு கடல் நீரால் நிரப்பப்படுகிறதோ அதற்கேற்றாற் போல்நீர்மூழ்கி நீரினுள் அமிழும் வெளி கொள்கலனானது தேவையான அளவு கடல் நீரை உள்ளேயோ அல்லது வெளியேயோ அனுப்பக் கூடிய அமைப்பைக் கொண்டிருக்கும்.

## தமிழ்

6ஆம் பக்கத் தொடர்ச்சி

பாட நூலில் எழுதப்பட்டிருந்தது. அக் கட்டுரையில் சிங்கள மக்கள் தமிழ் அரசன் பால் வைத்திருந்த மதிப்புப் பற்றி விளக்கப் பட்டிருந்தது. புதிய நூலில் எல்லாளன்பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. இதே போன்று நன்னெறி I, II, இந் நூலில் இடம் பெறவில்லை.

முன்னைய பதிப்பில் பொலநறுவை என்ற பாடம் இருந்தது பொலநறுவை அனுராதபுரியில் தமிழர் ஆட்சிசெய்தது பற்றியும் பொலநறுவைச் சிவாலயம் பற்றியும் தெளிவாக எழுதப்பட்டிருந்தது அத்துடன் இந்நகரங்கள் இரண்டும் தமிழரின் பழைய தலைநகரமாக விளங்கியமை பற்றியும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

தற்போது வெளிவந்துள்ள 6 ஆம் ஆண்டுபாடநூலை படிக்கும் தமிழ் மாணவன் பத்துப் பாடங்களுக்கு மேல் முஸ்லிம்களைப் பற்றி அறிய வேண்டியுள்ளது. சிங்கள கலாசாரம் பற்றி 2 பாடங்கள் இருக்கின்றன. கிறிஸ்தவ மதம் சம்பந்தமானது ஒரு பாடம். வெளிநாட்டு அறிஞர் பற்றியும் ஒரு பாடம் இருக்கின்றது.

விகிதாசாரத்தில் அதிக எண்ணிக்கையுள்ள தமிழ் மாணவனுக்கு உள்ள பாடங்களின் எண்ணிக்கையோ மூன்றே மூன்றாகும். இதனைத் தான் தமிழ் அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந் நூல் ஆலோசனைக் குழுவிலும் தமிழர் இடம்பெற்றுள்ளனர்.

பத்தாண்டு மாணவன் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு அமர்வதானால் கண்டிப்பாக அரசாங்கம் வழங்கிய நூலைப் படிக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் மாணவனின் மொழி அறிவுக்காக, தமிழ் மக்கள் கலை கலாசாரத்தின் வளர்ச்சிக்காக, அரசாங்கம் தரும் தமிழர் கலாசார சீரழிவுக்கான பாட நூல்களை படியாது உப பாடநூல்களைப் படித்து அறிவைப் பெருக்கலாமென்பதே எனது கருத்தாகும்.

தமிழீழத்திற்கு ஒரு கல்விச் சபை நிறுவப்பட்டு தமிழ் மாணவருக்கான உப பாட நூல்களை எழுதி வெளியிட கல்விமான்கள், ஆசிரியர்கள் ஆசிரியதொழிற் சங்கங்கள் முன்வர வேண்டும்.

புத்தொளி
ஆனைக்கோட்டை

## முதற்கோணல்

சுதந்திர விழாவிற் பங்குபற்றிச் சிங்கக் கொடியை உயர்த்திவைப்பதற்காகக் குளோஸ்டர் கோமகனார் அடுத்தமாதம்இலங்கைக்குவிஜயம் செய்யவிருக்கிறார். வரவேற்புவைபவத்தில் கலந்து கொள்ளக் கண்டியில் வதியும் சிங்கள மக்கள் மறுக்கின்றனர் என அறியக் கிடக்கிறது. மல்வத்த அஸ்கிரிய சங்க பிக்குகளின் தலைவர்களைச் சந்தித்து இந்தச் சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்குப் பிரதமர் முயற்சிப்பார் என்ற செய்தியும் எட்டியுள்ளது. இலங்கைச் சுதந்திர மசோதாவிற் கண்டிச் சாசனத்திற்காணப்படும் ஐந்தாவது பிரிவாகிய பௌத்த மதம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பகுதிசேர்க்கப்பட்டு இவ் பிரகடனம் இராசமாளிகையில் கோமகனால் பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என பிக்குகள் கருதுகிறார்கள். வெகு விரைவில் அதற்கான மசோதா சமர்ப்பிக்கப் படுமென கல்வி அமைச்சர் கூறியதாகத் தெரிகிறது.

(சுதந்திரன் 11-01-1948)

நிரந்தர போர் நிறுத்தத்திற்கு

# ஈராக் பெற்றோலிய வருவாயில் 25 வீதம் ஒதுக்குமாறு நிபந்தனை

(நியூயோர்க்)

வளைகுடாவில் நிரந்தர போர் நிறுத்தத்தை ஏற்படுத்த ஈராக்மீது கடும் நிபந்தனைகளை விதிக்கும் தீர்மானமொன்றை ஐ. நா. பாதுகாப்புச்சபை நேற்றுமுன்தினம் நிறைவேற்றியுள்ளது.

அமெரிக்காவால் தயாரிக்கப்பட்டு ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் அமெரிக்காவால் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டுவரப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது 12 உறுப்பினர்கள் ஆதரவாகவும் கியூபா எதிர்த்தும் வாக்களித்தன. ஜேமனும், ஈக்குவேடோர் ஆகிய இரு நாடுகளும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்தத் தீர்மானங்களின்படி ஈராக் தனது இரசாயன ஆயுதங்களையும், கிருமி ஆயுதங்களையும், 150 கிலோ மீற்றருக்கு அப்பால் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகளையும் அழிப்பதற்கு உடன்படவேண்டும். அணுவாயுதங்களையோ, அதற்கு வேண்டிய பொருள்களையோ வாங்குவதில்லை என்று உறுதி கூறவேண்டும்.

குவைத்துடனான 1963 ஆம் ஆண்டில் எல்லை ஒப்பந்தத்தை ஈராக் ஏற்கவேண்டும், ஈராக்கின் எல்லையில் பத்து கிலோ மீற்றர் வரையிலும், குவைத்தின் 5 கிலோ மீற்றர் வரையிலும் உள்ள இராணுவமற்ற பகுதியை கண்காணிக்க ஐ. நா. சபையின் படை ஏற்படுத்தப்படும்.

குவைத்மீது ஈராக் படை எடுத்து நீண்ட போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கு நிதியம் ஒன்றை உருவாக்கி அதற்கு ஈராக் தனது எண்ணெய் வருவாயில் 25 வீதத்தை தரவேண்டும்.

எந்த ஒரு நாட்டின் சுற்றுப்புறத்திற்கோ, இயற்கைவளங்களுக்கோ சேதம் ஏற்பட்டிருந்தால் அதற்கு ஈராக்தான் பொறுப்பு என்றும் ஈராக்கிற்கு வழக்கமான ஆயுதங்களை விற்பதற்கும் காலவரையறையற்ற தடையை இந்தத் தீர்மானம் விதித்துள்ளது.

இந்த நிபந்தனைகளை ஈராக் ஏற்றால் மட்டுமே வளைகுடாவில் நிரந்தரபோர் நிறுத்தம் கொண்டுவரப்படும் என்றும் ஈராக்கின் தென்பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவம் வெளியேறும் என்றும் ஐ. நா. பாதுகாப்புச்சபை தெரிவித்துள்ளது.

## ஐ. நா. தீர்மானம் குறித்து ஈராக் பலத்த கண்டனம்

(நியூயோர்க்)

ஈராக் பொருளாதார ரீதியாக அழிக்கப்பட்டுள்ளதுஎன்பதை ஐ. நா. பாதுகாப்புச் சபை தனது தீர்மானத்தில் குறிப்பிடவில்லை என்றும் கவனித்துக் கொள்ளவில்லைஎன்றும் ஈராக் குற்றஞ் சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் ஐ. நா. பாதுகாப்புச்சபையால் கொண்டுவரப்பட்டதீர்மானங்கள் குறித்து ஐ. நா. விற்கான ஈராக்கிய தூதுவர் குற்றஞ்சாட்டி கருத்து வெளியிட்டுள்ளார். வளைகுடாப் போரினால் ஈராக் கடுமையான அளவில் பொருளாதார ரீதியாக பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் ஈராக் மட்டும் தான் பலநாட்டுப்படைகளின் தாக்குதலுக்கு உள்ளானது என்றும் ஆனால் இது குறித்து ஐ. நா. பாதுகாப்புச்சபை கவனத்தில் கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

## சிறிமாபுரத்தில் தமிழர் பலர் காடையரால் கொலை

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் திருமலை நகர், சிறிமாபுரம் பகுதிகளில் நின்ற தமிழ்ப் பொதுமக்கள் பலர் சிறிலங்கா இராணுவத்தாலும், சிங்களக் காடையினராலும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் இறந்தனர் என்ற விபரம் ஏதும் தெரியவரவில்லை.

## தற்கொலை

(புங்குடுதீவு)

நோயின் உபாதை தாங்க முடியாத வயோதிபர் ஒருவர் தூக்கில் தொங்கி தன் உயிரை மாய்த்துள்ளார், இச் சம்பவம் புங்குடுதீவுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. புங்குடுதீவு கிழக்கு வல்லன் பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (வயது 80) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரை மாய்த்தவராவார்.

மன்னாரிலும்

— வசிட்டன் (அ. நாகராசா நானாட்டான்)
— மகாலிங்கம் (புண்ணியமூர்த்தி இராசையா செட்டியார் கட்டை அடம்பன்)
— சந்தாம்பிள்ளை (திருச்செல்வம் சகயநாதன்- வாழ்க்கைப்பட்டான் கண்டல் மன்னார்)
— புவிராஜ் (யோ. ஜோன்சன்-பெரியகட்டு செட்டிகுளம் வவுனியா)

ஆகியோர் வீரமரணமடைந்தனர் இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் பம்பைமடு நோக்கி வந்த இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் —

— துரோணர்

வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## சிறிலங்கா அரசியல் தீர்வை முன்னெடுக்க வேண்டும் - வெங்கட்ராமன்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர் வெங்கட்ராமன் வலியுறுத்தியுள்ளார். இந்தியாவுக்கான புதிய தூதுவராக நியமனம் பெற்றுள்ள நெவில் கனகரத்தினா தமது நியமனப்பத்திரங்களை புதுடில்லியில் குடியரசுத் தலைவரிடம் கையளிக்கும் நிகழ்ச்சியிலேயே இவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணப் பகுதிகளில் நிலவும் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டிய அவசியம் எனவும் அரசியல் தீர்வொன்றே நிரந்தர அமைதிக்கு வழிவகுக்கும் என்பதால் இலங்கை தொடர்ந்து அந்தப்பாதையில் முயற்சிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார். இலங்கை இந்திய பொருளாதாரக் கூட்டுக் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதை வரவேற்ற திரு. வெங்கட்ராமன் அடுத்த ஆண்டில் கொழும்பில் நடக்கும் 'சார்க்' மாநாடு இலங்கை - இந்திய உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என்று நம்புவதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பேசிய இலங்கைத் தூதுவர் இலங்கையின் பல்வேறு பிரிவினருக்கு இடையே நிலவும் முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தைமூலம் தீர்க்க முடியும் என்றும் இலங்கை இந்திய உறவுகள் இருநாடுகளும் பயன் பெறத்தக்க வகையில் வலுப்படுத்தப்படும் என நாம் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

## இன்று நேர்முகப் பரீட்சை

செய்தித் தகவல் மையத்தினால் கோரப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இன்று (05-04-91) காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது விண்ணப்பதாரிகள் முன்னர் அறிவித்தலின்படி சகல அத்தாட்சிப் பத்திரங்களுடன் கோப்பாயிலுள்ள அலுவலகத்தில் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (விளம்பர இலக்கம் B-2328)

## சிறிலங்கா இராணுவத்தின் 9 சடலங்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

மீண்டும் சிறிலங்கா இராணுவத்தின் உடல்களும் ஆயுதங்களும் முத்திரைச் சந்தைக்கு நேற்று காட்சிக்கு வந்தன.

காரைநகர் கடற்படை முகாமில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட ஒன்பது சிறிலங்கா இராணுவத்தினரின் உடல்களும் இராணுவம் போட்டு விட்டு ஓடிய ஆயுதங்களும் நேற்றுக் காலை ஒன்பது மணியிலிருந்து மாலை மூன்றரை மணி வரை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன மக்கள் நீண்ட வரிசையில் நின்று பார்வையிட்டனர்.

கண்ணனின் புகழுடல் அஞ்சலிக்கு

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை நிரையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கொட்டகையில் மேடை ஒன்று அமைக்கப்பட்டு இந்த ஆயுதங்களையும் இராணுவத்தினரின் உடல்களையும் கைப்பற்றும் சண்டையில் முன்னின்று போராடி வீரமரணம் அடைந்த போராளி கண்ணனின் பூதவுடல் அந்த மேடையில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. ஆயுதங்களை பார்த்த மக்கள் கண்ணனின் உடலுக்கு தமது மரியாதையை செலுத்தி சென்றதை காணக்கூடியதாக இருந்தது. (லோ)

தகவல்கள்

ணுவத்திற்கு ஏற்பட்ட சேத விபரங்கள் குறைக்கப்பட்டும், விடுதலைப் புலிகளுக்கு ஏற்படும் இழப்புகள் அளவுக்கு மீறி மிகைப்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது என்றும் அந்த விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டது

வவுனியா

இடம்பெற்று வருகிறது. இப்பகுதியில் பொதுமக்களின் வீடுகளை இராணுவத்தினர் சூறையாடுவதுடன், கால்நடைகளை அழித்தும் வருகின்றனர்.

இதேவேளைமூன்றாம்பிட்டி புளியங்குளம் பகுதியில் நின்ற இராணுவத்தினர் பம்பைமடு வந்தபோது விடுதலைப் புலிகளுடன் தாக்குதல் மூண்டது இராணுவத்தினர் பலத்த இழப்பைச் சந்தித்த போதிலும் சேதவிபரம் தெரியவில்லை. இத்தாக்குதல் முடிவடைந்ததும் இராணுவத்தினரின்

- ★ ரி-56 ரவைக்கூடு 03
- ★ ஜே ஆர் கைக்குண்டு 02
- ★ ஐ எம் ரவை 90


ஆகியன கண்டெடுக்கப்பட்டன இறுதியாக சாளம்பைக்குளத்தில் இராணுவத்தினர் பனையூர் இராணுவ முகாமுக்கும், பம்பைமடுவில் நின்ற இராணுவத்தினர் குடுவெந்த புலவு இராணுவ முகாமுக்கும் சென்று...

6 ஆயுதப்படையினர்

கட்டத்தின்பின் நடந்தசெய்தியாளர் மாநாட்டில் வடக்கு கிழக்கு நிலைமைபற்றி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏயர்சீப் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ விளக்குகையில் மேலும் நான்கு கடற்படையினரையும், இரண்டு இராணுவத்தினரையும் இழந்துள்ளதுடன் முப்பத்தேழு பேர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆயுதப்படையினரின் கவனத்தை ஏனைய இடங்களில் இருந்து திசை திருப்பவே காரைநகர் கடற்படைமுகாம் மீது புலிகள் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் கூறினார். வேறொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சிலாவத்துறையில் இருபத்தேழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், அறுபத்தெட்டுப்பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

வேப்பங்குள மோதலில் இருபத்திமூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் முப்பத்தெட்டுப் பேர் காயமடைந்ததாகவும், ஐந்து இராணுவத்தினர் காணாமல் போனதாகவும் ஏற்றுக்கொண்டார்.




உத்தர பிரதேச

## சட்ட சபை கலைப்பு குஜராத்தில் புதிய கட்சி

(புதுடில்லி)

உத்தர பிரதேச சட்ட சபைகலைக்கப்பட்டுவிட்டது; உத்தரப் பிரதேச முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் ...ற்கு இந்திரா காங்கிரஸ் கட்சி வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதைத் தொடர்ந்தே இக்கலைப்பு இடம்பெற்றது, அடுத்த தேர்தல் வரை முலாயம் சிங் யாதவ் காபந்து முதலமைச்சராக கடமையாற்றுவார்.

அதேவேளை குஜராத் முதலமைச்சர் சிமன் பாய் படேல் புதிய பிராந்தியக் கட்சியை அமைத்துள்ளார். அக்கட்சிக்கு ஜனதா தள் குஜராத் எனப் பெயரிட்டுள்ளார், அதேவேளை சிமன் பாய் படேலின் அமைச்சரவைக்கு தொடர்ந்தும் ஆதரவு அளிக்கப் போவதாக காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

காரைநகரில்

களைவீசித்தாக்குதலைநடாத்தியது.

அதேவேளை நேற்று இரவு 11 30 முதல் 1 மணிவரை பலாலி இராணுவ முகாமில் இருந்து வந்த ஆட்லறி ஷெல்கள் கடற்படை முகாமைச்சுற்றாடலில் வீழ்ந்து வெடித்தன. சில ஷெல் குண்டுகள் கடலிலும் வீழ்ந்ததாக தெரிகிறது.

இத்தாக்குதலின்போது களபூமியில் உள்ள பொதுமக்களின் சுமார் பத்து வீடுகள் பலத்த சேதமடைந்தன. திக்கரை முருகமூர்த்தி ஆலயமும் பலத்த சேதமடைந்துள்ளதுடன் இவ் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள வீடொன்றில் பாதுகாப்புக்காக பதுங்கியிருந்த திரு. வை சின்னாரம் (வயது 65) என்ற வயோதிபர் காயமடைந்துள்ளார். (க)(ச)

விமானக் குண்டு

இரண்டு குண்டுவீச்சு விமானங்களும், ஒரு அவ்ரோ விமானமும் மாறி மாறி ஒன்பது குண்டுகள் வீசியதால் நானாட்டான் கிராமம் முற்றாக அழிந்துபோய்விட்டதாக அங்கிருந்து எமக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

வேப்பங்குளத்தில்

இதேவேளை அண்மையில் வேப்பங்குளத்தில் இடம்பெற்ற தாக்குதல்கள் முடிவடைந்ததும் அதேதினம் விடுதலைப்புலிகள் அப்பகுதிக்குச் சென்று பார்த்தபோது

- ★ 5 56 ரக ரவை-1300
- ★ 203 எறிகணை (லோஞ்சர்)-14
- ★ ஜே.ஆர். ரக கைக்குண்டு-3
- ★ மினி மினி மேலதிக சுடுகுழல்-1
- ★ எவ். என். சி ரக ரவைக்கூடுகள்-5
- ★ வெளிச்சக்குண்டு-1

ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் ஒரு இராணுவ சிப்பாயின் சடலம் அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டதாகவும் [illegible]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திர வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் [illegible]